# திருவாகப் பாடற்தொகுப்பு



நயினாதீவைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட



## அமரர்
# திருமதி நடராசா குணபூஷணி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 06.11.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்
# திருமதி நடராசா குணபூஷணி

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 06.11.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எமது
## குடும்ப ஒளி விளக்குக்கு
## சமர்ப்பணம்

இத் தரணியில் அன்பு சுரந்து
இல்லறத்தை நல்லறமாக்கி
வாசம் குன்றா வாழ்வு தந்து
வளர்ச்சிக்கு வழி காட்டினீர்
திரும்பும் இடமெல்லாம் நினைவு தந்து
ஆண்டவன் நிழலில் அமரத்துவம் அடைந்த
எங்கள் அன்புத் தெய்வமே !
உங்கள் பாதம் பணிந்து வணங்கி
கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



**இங்ஙனம்**
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# நயினாதீவு செம்மணத்தம்புலம்
# ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான்



பாரதத்தை உலகறிய வரையதனில்
ஒரு கொம்பால் வரைந்து
வாதவூரர் திருக்காதை தனைக் குறுமுனியால்
உலகறிய உணர்த்தி மேலாம்
பேரகத்தை அடைந்தடியார் பேறுபெறக்
கருணைமழை பொழியும் - ஞான
வீரகத்தி விநாயகரைச் செம்மணத்தம்புலத்திறைஞ்சி
வினைகள் தீர்ப்பாம்

ஆக்கம்: சி. ஆ. கதிரித்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி துணை

# நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன்



திருவோங்கு தெய்வீக சேஷத்திர மதாகியுந்
திகழீழ மண்டலத்தின்
சிகரமது வாகிடும் யாழ்ப்பாண நாட்டினிற்
றிகழ்தீப மென்னு மெழில்சேர்
உருவோங்கு நயினையென உலகெங்கு மேபுகழ
உற்றசை வாக மத்தின்
உயர்வுபெறு நல்லரண தாகவே யாவரும்
உவகை கொள்ளும் வண்ணமாய்த்
தருவோங்கு மிணையிலாக் கல்விகேள் விகளோங்கு
தக்க சம்பன்ன ருளராய்ச்
சாற்றுதற் கரியபொரு ளாகிடுஞ் சைவநெறி
தனிலும்பர் பதி யென்னவே
கருவோங்கு நயினையிற் கோவில்கொண் டடியருக்
கருள் புரிந்திடு மன்னையே
கங்கை மதி கொன்றையணி யுஞ்சடிலர் பாரியே
கருணைபொழி நாகம்மையே.

ஆக்கம்: சி.ஆ.கதிரித்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அன்னையாய் இருந்து அனைத்துமே தந்து
தன்னையே உருக்கிய தாயடி சரணம்



தோற்றம் 28.12.1947

மறைவு 07.10.2022

# அமரர்

# திருமதி நடராசா குணபூஷணி

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

வருஷம் சுபகிருது வளம் சேர் புரட்டாதி இருபத்து வெள்ளி
திருமிகு வளர்பிறை திரியோதசிசேர் சதயம் அருள்மிகுந்த
செம்மணத்தார் பாதம் தினம் வணங்கும் குணபூஷணியாள்
அம்பிகையின் அருள்சேர அடைந்தாள் நடராசனிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் துதி

*திருச்சிற்றம்பலம்*

திருவாக்கும் செய்கருமம் கை கூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமேயிருங் கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பண்ணிணேர் மொழியாள் பங்க! நீ அல்லாற்
பற்றுநான் மற்றிலேன், கண்டாய்
திண்ணமே ஆண்டாய், சிவபுரத்தரசே!
திருப்பெருந்துறை உறைசிவனே!
எண்ணமேஉடல்வாய் மூக்கொடுசெவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணில்மேல் அடியேன் வாழ்கிலேன், கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே!

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதம் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

அண்ணலே யெனையாண்டு கொண்டருளிய வமுதே
விண்ணிலே மறைந்தருள் புரிவேத நாயகனே
கண்ணி னாற்றிருக்கயிலை யிலிருந்த நின்கோல
நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணித்தார்.

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
எந்தன் உயிர்காதரவு தருவாயே
தம்பிதனக் காகவனத் தனைவோனே
தந்தைவலத் தாலருள் கைக்கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமாளே.

## அபிராமி அந்தாதி

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நடராசா குணபூஷணி அவர்களின் வாழ்க்கை வரலாறு

**"ஈன்ற பொழுதிந்(ற்) பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"**

இலங்கை திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணக் குடா நாட்டில் அமைந்துள்ள சப்த தீவுகளில் நடுநாயகமாகத் திகழ்வது நயினாதீவு அன்னை நாகபூஷணி அம்பிகை அமர்ந்திருந்து அருளாட்சி புரிய ஆன்மிகச் சிறப்பும் வரலாற்றுத் தொன்மையும் நிறைந்த பதியாக நயினாதீவு விளங்குகின்றது. இத் தீவின் தென்புறமாக செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் ஆலயத்தின் அருகே அவரைக் குல தெய்வமாகப் பேணி வழிபட்ட உயர் வேளாளர் குல மரபில் வந்த ஸ்ரீமான் கதிரித்தம்பி யோகம்மா தம்பதிகளின் கனிஷ்ட மகளாக 1947ம் ஆண்டு மார்கழி மாதம் 28ஆம் திகதி அன்று குணபூஷணி அவர்கள் பிறந்தார். இவருடன் மூத்த சகோதரிகளாக கனகம்மா, மகேஸ்வரி, சரஸ்வதி, சவுந்தரம், பெரியநாயகி ஆகியோரும் அன்புக்கோர் அண்ணனாக ஆறுமுகமும் ஆசைக்கோர் தம்பியாக கதிரேசபிள்ளையும் பிறந்தார்கள். இவர்களுள் மகேஸ்வரி அவர்கள் இரண்டு வயதிலேயே மரணிக்க ஏனைய ஏழு பிள்ளைகளும் தாய், தந்தை மற்றும் உறவுகளின் அன்புடனும், அரவணைப்புடனும் சிறப்பாக வாழ்ந்து மகிழ்ந்தார்கள்.

அமரர் குணபூஷணி அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை நயினாதீவு மகா வித்தியாலயத்திலும் கற்றார். HSC வகுப்புடன் தனது பாடசாலைப் படிப்பை நிறைவு செய்தாலும் சிறந்த கை எழுத்தும், மனக்கணிதத் திறமையும், நிறைந்த மதி நுட்பமும் கொண்டவராக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்கள் சிறுவயது முதலே தனது தாயார் மற்றும் தாய் மாமன்கள் மாமிகளான சரவணமுத்து - நாகம்மா கோவிந்தபிள்ளை பர்வதம் ஆகியோரின் தோட்ட வேலைகளில் சகோதர சகோதரிகளுடன் இணைந்து உதவுவதுடன் ஆடு, மாடு. கோழி, வளர்த்தல் மற்றும் வீட்டு வேலைகளுக்கும் உதவி வந்தார்.

திருமணப்பருவம் அடைந்ததும் நயினாதீவின் உயர் வேளாளர் வழிவந்த நாகலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக மகனார் நடராசா அவர்களை தனது வாழ்க்கைத் துணைவராகத் தெரிவு செய்து இல்லற பந்தத்தில் இணைந்து இனிதே வாழ்ந்தார்கள். தனது கணவரின் வழியில் மைத்துனிகளாக இந்துமதி, திலகவதி, சிவசக்தி ஆகியோரையும் விக்கினேஸ்வரன் அவர்களை சகலனாகவும் பெற்று அவர்களுடனும் அன்புடன் உறவாடி மகிழ்ந்தார்.

தனது சகோதர சகோதரிகள் வழியில் இரத்தினசபாபதி, சொர்ணலிங்கம், மயில்வாகனம் ஆகியோரை மைத்துனர் களாகவும் திலகவதி,வரதலட்சுமி ஆகியோரை மைத்துனிகளாகவும் பெற்று மகிழ்ந்தார்.

அமரர் அவர்கள் தமது இல்லற வாழ்வின் நற்பயனாக சுரநுதா சோபிதா, மயூரன், நர்த்தனன்,பிரணவன் ஆகிய ஐவரையும் மக்களாகப் பெற்று மகிழ்ந்ததுடன் சுசந்த, நந்தகுமார், ஆகியோரை மருகர்களாகவும், சகிலா, வேணுயா ஆகியோரை மருகிகளாகவும் கண்டு இன்புற்றார். தமது பிள்ளைகளின் இல்லறத்தின் பேறாக அஜிலவன், டெஷாதி, கிர்சிகா, சதுர்ஷன், ரதுர்திகா, அபிவர்ஷினி, கஜவர்ஷன், கிருஷ்ணவி ,அக்ஷ்ணவி, ஆருஷ்ணவி ஆகியோரை பேரக்குழந்தைகளாகவும் கண்டு இன்புற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்களது கணவர், வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் தொழிநுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றினார். இவருடைய சேவை நிலையங்கள் கதிர்காமம், கண்டி என தூர இடங்களில் இருந்ததன் காரணமாக அமரர் அவர்களே குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டியிருந்தது. தனது கணவரின் அன்புடனும், வழிகாட்டலுடனும் தனது தாயாரின் (ஆச்சியின்) பாசமும் அரவணைப்புடனுன் மிகச் சிறப்பான முறையில் குடும்பத்தை வழி நடத்திச் சென்றார். தமது குழந்தைகளுக்கு சிறப்பாக கல்வி அறிவைப் பெற்றுக் கொடுத்து அவர்களை இன்று உயர் நிலையில் இட்டுச் சென்றார். தாம் பெற்ற ஐந்து பிள்ளைகளையும் ஆசிரியர்களாகக் கண்ட ஒரு தாய் என்ற சிறப்புடன் இவர் விளங்குகின்றார். மூத்த மகன் மயூரன் இலங்கை அதிபர் சேவையில் இணைந்து கொண்டதுடன் தான் என்றுமே தன் சிறகுகளுக்குள் வைத்திருந்த கடைக்குட்டி மகனார் பிரணவனை இலங்கையின் உயர் பதவி நிலை சேவையாகிய இலங்கை நிர்வாக சேவை (SLAS) அதிகாரியாகக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தார். சுரநுதா, சோபிதா, நர்த்தனன் ஆகிய மூவரும் ஆசிரியர்களாகக் கடமை ஆற்றுகிறார்கள். அமரர் அவர்களது வாழ்க்கையில் இவரது சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், பெறாமக்கள், மருமக்கள் அனைவரதும் அன்பும், ஆதரவும் என்றும் கிடைத்திருந்தது.

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் 1991 இந் நடுப்பகுதியில் தீவகம் முற்றாக யாழ் குடாநாட்டுடன் துண்டிக்கப்பட்டதன் காரணமாக தனது சகோதர, சகோதரிகளுடனான தொடர்பும் தூரத்துப் போகவும் உடன் இருந்த தாயாரும் (ஆச்சி) உடல் நலத் தேவைகளின் பொருட்டு நீர்கொழும்பு செல்ல நேரிட்ட நிலையில் கணவருடனும் பிள்ளைகளுடனும் நயினாதீவில் வசித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன ரீதியாகப் பெரும் சோதனைகளை எதிர்கொண்ட போதிலும் தன் பிள்ளைகள் மீது கொண்ட அளவற்ற அன்பாலும், பாசத்தாலும் தைரியத்தையும், ஆறுதலையும் தனக்கு தானே உருவாக்கி தமது மதிநுட்பத்தாலும். அனுபவப்பக்குவத்தாலும் பிள்ளைகளுக்கு நல்லதோர் வழிகாட்டியாக இருந்து அவர்களை கல்வியில் சிறந்தவர்களாக உருவாக்க கணவருடன் சேர்ந்து அயராது பாடுபட்டதுடன் அக் காலத்தில் கணவனின் சமய, சமூக பணிகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்.

பின் நாட்களில் 2000ம் ஆண்டு கொடிய புற்று நோய் இவரைப் பற்றிக் கொண்டது எனினும் ஒரு வருட காலம் தனது நோயை வெளிப்படுத்தாது தனக்குத்தானே வைத்தியராகவும் இருந்தார். இதற்கு அப்போதைய நாட்டுச் சூழ்நிலையும் ஒரு காரணமாக இருந்தது. பின்னர் 2001ம் ஆண்டு உடல் நலம் மிகவும் மோசமடைய நயினாதீவு வைத்தியசாலையில் நடைபெற்ற கடற்படையினரின் மருத்துவ முகாமில் பரிசோதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு இவரது புற்றுநோய் உறுதிசெய்யப்பட்டது. இக்காலப்பகுதியில் தனது அண்ணன் ஆறுமுகம் அவர்களின் வீட்டில் தங்கியிருக்க அண்ணி திலகவதி, அக்கா சரஸ்வதி, ஆகியோர் உடனிருந்து கவனித்தனர். கடைசி மகன் பிரணவனை பிரிய முடியாதவராக அவரும் தாயாருடன் ஒட்டி இருந்த வந்த நிலையில் நோயின் தாக்கம் உச்சமடைய மேலதிக சிகிச்சைக்காக மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. கணவர். பிள்ளைகள், உறவினர்கள் யாவரும் கலங்கி நின்ற வேளையில் அன்னார் சிகிச்சைக்காக மகரகம செல்வதற்கு தைரியமாக முன் வந்தார். 2001ம் ஆண்டு ஆவணி மாதம், அக்கால நாட்டுச்சூழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் அசாதாரணமாக மாறி இருந்த நிலையில் கொழும்புக்கான தரைமார்க்க தொடர்புகள் எவையும் இல்லாத வேளையில் விமான போக்குவரத்துக்கள் கூட மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த காலத்தில் கணவரின் அயராத கடும் முயற்சியினால் விமானம் மூலம் கொழும்பு செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

நோயின் உச்சத்தாக்க நிலை காரணமாக நிமிர்ந்துகூட இருக்க முடியாதவராகிப் போக அமரர் அவர்கள் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் இருந்து நீண்ட வரிசையில் பலாலி விமான நிலையம் செல்வதற்கான பயணத்துக்காக நிற்க பிள்ளைகளும், உறவுகளும், வழி அனுப்பி வைத்துக் காத்திருக்க ஏதோ ஒரு நம்பிக்கையின் உறுதியுடன் கணவரின் துணையுடன் சிகிச்சைக் காக மகரகம சென்றார்.

கொழும்பில் மருகர் பாலச்சந்திரன் அவர்களின் அரவணைப்பும் வழிகாட்டலும் இணைந்து கொள்ள சகோதரி பெரியநாயகியின் கவனிப்புடனும், கணவரின் துணையுடனும் மகரகமவில் சிகிச்சை வழங்கப்பட்டது. ஏறத்தாழ நான்கு மாதங்கள் அம்மாக்கா (மூத்தசகோதரி) கனகம்மா மற்றும் சகோதரி பெரியநாயகி ஆகியோரின் அரவணைப்புடன் நீர்கொழும் பில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். இறை சித்தமும், கணவரின் அன்பும், கவனிப்பும், பாதுகாப்பும் அன்னாரை மறுபிறப்பெடுத்தது போல சுகதேகி யாக்கி 2002ம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்தடைந்தார். நீர் கொழும்பில் இருந்த வேளையில் பிள்ளைகளைப் பிரிந்து வாடியபோது கடைக்குட்டி மகனின் புலமைப்பரிசில் பரீட்சை முடிந்ததும் அவனை தன்னருகே அழைத்து வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்று நோயின் தாக்கமும் அதன் விளைவுகளும் காலத்தக்குக் காலம் வாட்டி வதைத்தாலும் அவை எதனையும் பொருட்படுத்தி வெளிக்காட்டாமல் ஒரு சுகதேகியான தோற்றத்துடனும் துடிப்புட னும் பிள்ளைகளின் நலனிற்காக தொடர்ந்து உழைத்ததுடன் கடைசி மகன் பிரணவனின் கல்வித்தேவைகளிற்காக யாழ் நகரில் அவனுடனேயே தங்கியிருந்து தன்னை அர்ப்பணித்து வந்தார். பின்னர் 2011 இல் மீண்டும் நயினாதீவில் வசிக்கத் தொடங்கிய நிலையில் அன்புக்கணவரின் திடீர் இழப்பு அன்னாரால் தாங்கிக் கொள்ள முடியாத பேரிழப்பாக மாறிப்போக மன உளைச்சலை எதிர்கொண்டார். இந்நிலையில் மீண்டும் 2018ல் புற்றுநோய் மறுபடியும் தீவிரமாக பரவிக்கொள்ள தெல்லிப்பளை வைத்திய சாலையில் புற்றுநோய் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். புற்றுநோய்க்கான சிகிச்சை வெற்றியளிக்க மூன்று வருடங்களிற்கு மேலாக சிகிச்சையை தொடர்ந்து பெற்றுவந்த நிலையில் 2022 பங்குனி மாதம் கோவிட் - 19 தொற்றிக்கொள்ள மரணப்படுக்கையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் பெற்றார்.

உடன் பிறந்த சகோதரிகள் மூவரின் தொடர்ச்சியான இழப்புக்களால் கவலை அடைந்திருந்த நிலையில் தனது அன்புச் சகோதரி சவுந்தரம் அவர்களுடன் தினமும் தொலைபேசியூடாக கதைப்பதன் மூலம் ஆனந்தம் கொண்டார். சவுந்தரக்காவின் அன்பும்,அரவணைப்பும் ஆறுதல் வார்த்தைகளும் அமரரவர் களுக்கு எப்பொழுதும் கிடைத்திருந்தது. இறுதி நேரத்திலும் சவுந்தரக்காவை வரச்சொல்லுமாறு கேட்டார். சவுந்தரக்காவும் கொழும்பில் இருந்து வந்துவிட்டார். மரணம் நிகழ்ந்த சமயம் தங்கையின் அருகில் நிற்காவிட்டாலும், மரணம் நிகழ்ந்து அடுத்த நொடியில் அருகில் வந்துவிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக்காலத்தில் மகனார் பிரணவன் மற்றும் பேரப்பிள்ளைகள் கிர்சிகா, சதுர்சன் ரதுர்திகா ஆகியோருடன் தங்கியிருந்து அவர்களின் பாசமும், பரிவும் நிறைந்த கவனிப்புடன் மீண்டும் ஓர் குழந்தையாகி பிள்ளைகளிற்கும் பேரப்பிள்ளைகளிற்கும் செல்லப்பிள்ளையாகி வாழ்ந்து வந்த நிலையில் அம்மை நோயும் வாட்டிக்கொண்டது. உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் புரட்டாதி 14ம் திகதி உடல்நலக்குறைவால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மூன்று கிழமைகள் சிகிச்சை பெற்று வந்தார்

வைத்தியசாலையில் இருந்த காலங்களில் மகளார் சோபிதா கூட இருந்து கவனிப்பதும் அவரின் கவனிப்பும் அருகாமையுமே அன்னாரின் தேடலாகவும் இருந்தது மற்றும் மகன்மார் மயூரன் குடும்பத்தினர் நர்த்தனன் குடும்பத்தினர் அருகாமையில் இருப்பதும் அவர்கள் அடிக்கடி தன்னை வந்து பார்த்துச் செல்வதிலும் மகிழ்ந்திருந்தார். மூத்த மகளார் சுரநுதாவின் வருகையும் இறுதி நாட்களில் அவர் அங்கிருந்த ஆறுதலும் உறவுகள் ஒன்று கூடியதும் உணர்ந்து மகிழ்ந்திருப்பார். மருகிகள் சகிலா, வேணுயா, அண்ணி திலகவதி, மைத்துனி வரதா ஆகியோரின் அன்பு வார்த்தைகளும், போசனை உணவுகளும் அன்னார் இறுதி நாட்களில் அனுபவித்த நினைவுகள் ஆகின. தனது அன்பு அண்ணர் ஆறுமுகம் தன்மீது கொண்ட பாசத்திற்கு முன் தன் வலியை வெளிகாட்ட முடியதவளாய் இறுதிச் சந்திப்பில் கூட தலையசைத்து விடை கொடுத்தார். சிறுவயது முதல் பாசமாகச் சின்னமாமி சின்னமாமி என அழைத்து வளர்ந்த மருகர் Dr. தர்ஸனன் அமரரின் உடல் நிலை தொடர்பாக வைத்தியர் களுடன் உரையாடி கேட்டறிவதுடன் இறுதி நாட்களில் நேரடியாக வந்து சின்னமாமி சின்னமாமி என அழைத்து அடிக்கடி வந்து பார்வையிட்டார். அமரரின் வாழ்வின் இறுதி இரவு, மருகர் தர்ஸனன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியின் பிரிவை முன் உணர்ந்தவராய் அதனை எவர்முன்னும் வெளிப்படுத்த முடியாதவராய் தனக்குள் அடக்கியவாறு மிகவும் வேதனையுடன் சின்னமாமியிடம் விடைபெற்று சென்றார். அடிக்கடி ஓடி வந்து நலம் கேட்கும் ஆசைத்தம்பி கதிரேசுவின் அன்பும் அன்னாரின் பலமாய் இருந்தது.

பேரக்குழந்தைகள், பெறாமக்கள் மருமக்கள், என அனைவரையும் அன்புடன் நேசித்த காரணத்தால் அவர்கள் அனைவரையும் தனது இறுதிப்படுக்கையில் கண்டு மகிழ்ந்திருந்தார். இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழும் பெறாமக்கள் மருமக்கள் அனைவரும் மிகக்கவலையடைந்து இவரது உடல் நிலை தொடர்பாக அடிக்கடி தொலைபேசி ஊடாக கேட்டறிந்து கொண்டிருந்தார்கள்

உறவினர்கள், ஊரவர்கள், அயலவர்கள் அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும், பழகி அவர்களது அன்புக்கு பாத்திரமாக இருந்ததுடன் தனது இறுதி நாட்களில் அவர்களின் தேடலும் இருந்தது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய் பேசாத, யாரையும், புண்படுத்தாத பேச்சுக்களும், அமைதியான சுபாவமும், வஞ்சகமற்ற நடத்தைகளும், அன்பால் இன்முகத்துடன் அனைவரையும் அரவணைத்து விருந்தோம்பல் செய்வதும் இவரிடத்தில் என்றும் இருந்தது.

அடிக்கடி வைத்தியசாலை சென்று சிகிச்சை பெறுவதும் வீடு திரும்புவதும் பழகிப் போனதால் அம்மா மீண்டும் வீட்டிற்கு வருவார் என பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் காத்திருக்க அவரோ தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசனிடம் செல்லத்தயாராகி விட்டதை யாரும் அறிந்திருக்க வில்லை.

ஐப்பசி மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை பிரதோஷ நன்நாள் காலை 8.30 மணியளவில் சுரநுதா, சோபிதா, மயூரன், நிர்த்தனன், பிரணவன் என தான் அன்புடன் அழைத்து உச்சரித்த தன் அன்புக் குழந்தைகள் ஐந்தும் அருகே சூழ்ந்து நிற்க அதில் இரு குரல்கள் தாயின் இரு காதோரமும் தேவாரம் பாட அன்னையவளின் உயிர் அமைதியான முறையில் அடக்கமடைய அன்னார் இவ் உலக வாழ்க்கையை முடித்து அம்பிகையின் பாதக் கமலங்களை சென்றடைந்தார்.

தாயானவள் தன் சேய்களிற்காக காலம் முழுவதும் தன்னை அர்ப்பணித்தாள். அவளிற்குபட்ட கடன் தீரப் போவதில்லை யாயிலும் தம் தாயை சேயாக்கி அவளிற்கு சிறு பணிவிடை செய்யக் கிடைத்தது என்பது அற்புதமான பாக்கியம் அப் பாக்கியத்தைத் தந்த எங்கள் தாய்க்கும் இறைவனுக்கும் நன்றிகள் பலகோடி அன்னையின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை எமக்கறிவித்த எம் குல தெய்வங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகப் பாடற்தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தமாக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமா றொன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய்யெம்பெருமான் வல்வினையேன் தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா மல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புரக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம்

## 1. மெய்யுணர்தல்

மெய்தான் அரும்பி, விதிர்விதித்து, உன் விரை ஆர்கழற்கு, என்
கைதான் தலை வைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய்தான் தவிர்ந்து, உன்னை, "போற்றி, சய, சய, போற்றி!" என்னும்
கைதான் நெகிழவிடேன்; உடையாய்! என்னைக் கண்டுகொள்ளே.

கொள்ளேன் புரந்தரன், மால், அயன் வாழ்வு; குடி கெடினும்,
நள்ளேன் நின்று அடியாரொடு அல்லால்; நரகம் புகினும்,
எள்ளேன் திரு அருளாலே இருக்கப் பெறின்; இறைவா!
உள்ளேன் பிற தெய்வம், உன்னை அல்லாது; எங்கள் உத்தமனே!

உத்தமன், அத்தன், உடையான் அடியே நினைந்து உருகி,
மத்தம் மனத்தொடு, "மால் இவன்" என்ன, மன நினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட, ஊர் ஊர் திரிந்து, எவரும்
தம் தம் மனத்தன பேச, எஞ்ஞான்று கொல் சாவதுவே?

சாவ, முன் நாள், தக்கன் கேள்வித் தகர் தின்று, நஞ்சம் அஞ்சி,
'ஆவ! எந்தாய்!' என்று, அவிதா இடும் நம்மவர் அவரே,
மூவர் என்றே எம்பிரானொடும் எண்ணி, விண் ஆண்டு, மண்மேல்
தேவர் என்றே இறுமாந்து, என்ன பாவம் திரிதவரே!

தவமே புரிந்திலன்; தண் மலர் இட்டு, முட்டாது இறைஞ்சேன்;
அவமே பிறந்த அரு வினையேன், உனக்கு அன்பர் உள் ஆம்
சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்; நின் திருவடிக்கு ஆம்
பவமே அருளு கண்டாய் அடியேற்கு; எம் பராபரனே!

பரந்து பல் ஆய் மலர் இட்டு, முட்டாது அடியே இறைஞ்சி,
'இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்' என்னும், அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே! நின்தன் வார் கழற்கு அன்பு, எனக்கும்
நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே.

முழுவதும் கண்டவனைப் படைத்தான், முடி சாய்த்து, முன்னாள்,
செழுமலர் கொண்டு எங்கும் தேட, அப்பாலன்; இப்பால், எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடகம் ஆடி, கதி இலியாய்,
உழுவையின் தோல் உடுத்து, உன்மத்தம் மேல்கொண்டு, உழி தருமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழிதரு காலும், கனலும், புனலொடு, மண்ணும், விண்ணும்
இழிதரு காலம், எக்காலம் வருவது? வந்ததன் பின்,
உழிதரு காலத்த! உன் அடியேன் செய்த வல் வினையைக்
கழிதரு காலமும் ஆய், அவை காத்து, எம்மைக் காப்பவனே!

பவன், எம்பிரான், பனி மா மதிக் கண்ணி, விண்ணோர் பெருமான்,
சிவன், எம்பிரான், என்னை ஆண்டுகொண்டான், என் சிறுமை கண்டும்;
அவன் எம்பிரான் என்ன, நான் அடியேன் என்ன, இப்பரிசே
புவன், எம்பிரான்! தெரியும் பரிசு ஆவது இயம்புகவே,

புகவே தகேன் உனக்கு அன்பருள், யான்; என் பொல்லா மணியே!
தகவே, எனை உனக்கு ஆட்கொண்ட தன்மை எப் புன்மையரை
மிகவே உயர்த்தி, விண்ணோரைப் பணித்தி; அண்ணா! அமுதே!
நகவே தகும் - எம்பிரான்! என்னை நீ செய்த நாடகமே.

## 2. அறிவுறுத்தல்

நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து, நான் நடுவே
வீடு அகத்தே புகுந்திடுவான், மிகப் பெரிதும் விரைகின்றேன்;
ஆடகச் சீர் மணிக் குன்றே! இடை அறா அன்பு உனக்கு, என்
ஊடு அகத்தே நின்று, உருகத் தந்தருள்; எம் உடையானே!

யான் ஏதும் பிறப்பு அஞ்சேன்; இறப்பு - அதனுக்கு என் கடவேன்?
வானேயும் பெறில் வேண்டேன்; மண் ஆள்வான் மதித்தும் இரேன்;
தேன் ஏயும்மலர்க் கொன்றைச் சிவனே! எம்பெருமான்! எம்மானே!
'உன் அருள் பெறும் நாள் என்று?' என்றே வருந்துவனே.

வருந்துவன், நின் மலர்ப்பாதம் அவை காண்பான்; நாய் அடியேன்
இருந்து நல மலர் புனையேன்; ஏத்தேன் நாத் தழும்பு ஏற;
பொருந்திய பொன் சிலை குனித்தாய்! அருள் அமுதம் புரியாயேல்,
வருந்துவன் நல் தமியேன்; மற்று என்னே நான் ஆம் ஆறே;

ஆம்ஆறு, உன் திருவடிக்கே அகம் குழையேன்; அன்பு உருகேன்;
பூமாலை புனைந்து ஏத்தேன்; புகழ்ந்து உரையேன்; புத்தேளிர்
கோமான்! நின் திருக்கோயில் தூகேன், மெழுகேன், கூத்து ஆடேன்
சாம் ஆறே விரைகின்றேன் சதிராலே சார்வானே.

வான் ஆகி, மண் ஆகி, வளி ஆகி, ஒளி ஆகி
ஊன் ஆகி, உயிர் ஆகி, உண்மையும் ஆய், இன்மையும் ஆய்,
கோன் ஆகி, யான், எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி, நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்; மனம் நின்பால்
தாழ்த்துவதும், தாம் உயர்ந்து, தம்மை எல்லாம் தொழவேண்டி;
சூழ்த்து மதுகரம் முரலும் தாரோயை, நாய் அடியேன்;
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான்; யானும் உன்னைப் புரவுவனே.

பரவுவார் இமையோர்கள்; பாடுவன நால்வேதம்;
குரவு வார் குழல் மடவாள் கூறு உடையாள், ஒரு பாகம்;
விரவுவார் மெய் அன்பின் அடியார்கள் மேன்மேல்; உன்
அரவு வார் கழல் இணைகள் காண்பாரோ, அரியானே;

அரியானே யாவர்க்கும்! அம்பரவா! அம்பலத்து எம்
பெரியானே! சிறியேனை ஆட்கொண்ட பெய் கழல்கீழ்
விரை ஆர்ந்த மலர் தூவேன், வியந்து அலறேன்; நயந்து உருகேன்
தரியேன்; நாள் ஆம் ஆறு என்? சாவேன்; நான் சாவேனே!

வேனில் வேள் மலர்க் கணைக்கும் வெள் நகை; செவ் வாய்; கரிய
பானல் ஆர் கண்ணியர்க்கும்; பதைத்து உருகும் பாழ் நெஞ்சே!
ஊன் எலாம் நின்று உருக; புகுந்து ஆண்டான்; இன்று போய்
வான் உளான்; காணாய் நீ; மாளா வாழ்கின்றாயே.

வாழ்கின்றாய்; வாழாத நெஞ்சமே! வல் வினைப் பட்டு
ஆழ்கின்றாய், ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்கு சொல்கின்றேன்; பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடல் ஆய வெள்ளத்தே.

## 3. சுட்டறுத்தல்

வெள்ளம் தாழ் விரி சடையாய்! விடையாய்! விண்ணோர்
பெருமானே! எனக் கேட்டு வேட்ட நெஞ்சாய்;
பள்ளம் தாழ் உறு புனலில்; கீழ் மேலாகப்
பதைத்து உருகும் அவர் நிற்க; என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால்; உடம்பு எல்லாம் கண்ணாய், அண்ணா!
வெள்ளம் தான் பாயாதால்; நெஞ்சம் கல் ஆம்;
கண் இணையும் மரம் ஆம் தீவினையினேற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையிலே கிடந்தேனை, புகுந்து நின்று,
போது நான் வினைக்கேடன், என்பாய் போல,
'இனையன் நான்' என்று உன்னை அறிவித்து, என்னை
ஆட்கொண்டு, எம்பிரான் ஆனாய்க்கு, இரும்பின் பாவை
அனைய நான், பாடேன்; நின்று ஆடேன்; அந்தோ!
அலறிடனே், உலறிடேன், ஆவி சோரேன்
முனைவனே! முறையோ நான் ஆன ஆறு?
முடிவு அறியேன், முதல் அந்தம் ஆயினானே!

ஆய நான்மறையவனும் நீயே ஆதல்
அறிந்து, யான் யாவரினும் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டும்,
நாதனே! நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன்
ஆயினேன்; ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார் - தாம் இல்லையே? அன்றி, மற்று ஓர்
பேயனேன்? இது தான் நின் பெருமை அன்றே!
எம்பெருமான்! என் சொல்லிப் பேசுகேனே?

பேசின், தாம் ஈசனே, எந்தாய், எந்தை
பெருமானே! என்று என்றே பேசிப் பேசி
பூசின், தாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றி எம்பெருமானே! என்று பின்றா
நேசத்தால் பிறப்பு இறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே! அவா வெள்ளக் கள்வனேனை,
மாசு அற்ற மணிக் குன்றே! எந்தாய்! அந்தோ!
என்னை, நீ ஆட்கொண்ட வண்ணம் தானே?

வண்ணம் தான் சேயது அன்று; வெளிதே அன்று,
அநேகன், ஏகன், அணு, அணுவில் இறந்தாய், என்று அங்கு
எண்ணம் தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்தும் ஆறு அறியாத எந்தாய்! உன் தன்
வண்ணம் தான் அது காட்டி வடிவு காட்டி
மலர்க் கழல்கள் அவை காட்டி, வழி அற்றேனை,
திண்ணம் தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்;
எம்பெருமான்! என் சொல்லிச் சிந்திக்கேனே?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை நின் தனக்கு ஆக்கி, நாயினேன் தன்
கண் இணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி,
வந்தனையும் அம் மலர்க்கே, ஆக்கி; வாக்கு, உன்
மணி வார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆர
வந்து, எனை ஆட்கொண்டு, உள்ளே புகுந்த விச்சை
மால் அமுதப் பெரும் கடலே! மலையே! உன்னைத்
தந்தனை செந் தாமரைக் காடு அனைய மேனித்
தனிச் சுடரே, இரண்டும்இல் இத் தனியனேற்கே.

தனியனேன், பெரும் பிறவிப் பௌவத்து, எவ்வம்
தடம் திரையால் எற்றுண்டு, பற்று ஒன்று இன்றி,
கனியின் நேர் துவர் வாயார் என்னும் காலால்
கலக்குண்டு, காம வான் சுறவின் வாய்ப் பட்டு,
இனி, என்னே உய்யும் ஆறு? ஒன்று என்று எண்ணி,
அஞ்சு எழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை,
முனைவனே! முதல், அந்தம், இல்லா மல்லல்
கரை காட்டி, ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே.

கேட்டு ஆரும் அறியாதான்; கேடு ஒன்று இல்லான்;
கிளை இலான், கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப, ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசு இட்டு, நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டி, பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து, ஆட்கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விச்சை தான் இது ஒப்பது உண்டோ? கேட்கின்
மிகு காதல் அடியார் தம் அடியன் ஆக்கி
அச்சம் தீர்த்து ஆட்கொண்டான் அமுதம் ஊறி
அகம் நெகவே புகுந்து ஆண்டான் அன்பு கூர
அச்சன், ஆண், பெண், அலி, ஆகாசம், ஆகி
ஆர் அழல் ஆய், அந்தம் ஆய், அப்பால் நின்ற
செச்சை மா மலர் புரையும் மேனி, எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே!

தேவர் கோ அறியாத தேவ தேவன்;
செழும் பொழில்கள் பயந்து, காத்து, அழிக்கும் மற்றை
மூவர் கோனாய் நின்ற முதல்வன்; மூர்த்தி
மூதாதை; மாது ஆளும் பாகத்து எந்தை;
யாவர் கோன், என்னையும் வந்து ஆண்டு கொண்டான்
யாம் ஆர்க்கும் குடி அல்லோம், யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன் அடியார் அடியாரோடு
மேன்மேலும் குடைந்து ஆடி, ஆடுவோமே.

## 4. ஆன்ம சுத்தி

ஆடுகின்றிலை; கூத்து உடையான் கழற்கு அன்பு இலை; என்பு உருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதும் செய்கிலை, பணிகிலை, பாத மலர்
சூடுகின்றிலை, சூட்டுகின்றதும் இலை, துணை இலி பிண நெஞ்சே!
தேடுகின்றிலை, தெருவுதோறு அலறிலை, செய்வது ஒன்று அறியேனே

அறிவு இலாத எனை, புகுந்து ஆண்டு கொண்டு அறிவதை அருளிமேல்
நெறி எலாம் புலம் ஆக்கிய எந்தையை, பந்தனை அறுப்பானை,
பிறிவு இலாத இன் அருள்கள் பெற்றிருந்தும், மாறு ஆடுதி, பிண நெஞ்சே!
கிறி எலாம் மிகக் கீழ்ப்படுத்தாய்; கெடுத்தாய் என்னைக் கெடுமாறே.

மாறி நின்று எனைக் கெடக் கிடந்தனையை, எம் மதி இலி மட நெஞ்சே!
தேறுகின்றிலம் இனி உனை, சிக்கெனச் சிவன் அவன் திரள் தோள்மேல்
நீறு நின்றது கண்டனை, ஆயினும் நெக்கிலை, இக்காயம்
கீறுகின்றிலை, கெடுவது உன் பரிசு - இது; கேட்கவும் கில்லேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிற்றவா, மனமே! கெடுவாய்; உடையான் அடி - நாயேனை
விற்று எலாம் மிக ஆள்வதற்கு உரியவன் விரை மலர்த் திருப்பாதம்
முற்று இலா இளம் தளிர் பிரிந்திருந்து, நீ உண்டன எல்லாம் முன்
அற்ற ஆறும், நின் அறிவும், நின் பெருமையும், அளவு அறுக்கில்லேனே.

அளவு அறுப்பதற்கு அரியவன், இமையவர்க்கு; அடியவர்க்கு எளியான்; நம்
களவு அறுத்து நின்று ஆண்டமை, கருத்தினுள் கசிந்து உணர்ந்திருந்தேயும்
உள கறுத்து, உனை நினைந்து, உளம் பெரும் களன் செய்ததும் இலை; நெஞ்சே!
பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை - பரகதி புகுவானே.

புகுவது ஆவதும்; போதரவு இல்லதும்; பொன் - நகர் புகப் போதற்கு
உகுவது ஆவதும்; எந்தை, எம்பிரான், என்னை ஆண்டவன் கழற்கு அன்பு
நெகுவது ஆவதும்; நித்தலும் அமுதொடு, தேனொடு, பால், கட்டி,
மிகுவது ஆவதும்; இன்று எனின், மற்று இதற்கு என்செய்கேன் வினையேனே?

வினை என்போல் உடையார் பிறர் ஆர்? உடையான், அடி-நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பு அன்று; மற்று அதனாலே,
முனைவன் பாத நல் மலர் பிரிந்திருந்தும், நான் முட்டிலேன், தலை கீறேன்;
இணையன்பாவனை, இரும்பு, கல், மனம், செவி, இன்னது என்று அறியேனே

ஏனை யாவரும் எய்திடல் உற்று, மற்று இன்னது என்று அறியாத
தேனை, ஆன் நெய்யை, கரும்பின் இன் தேறலை, சிவனை, என் சிவலோகக்
கோனை, மான் அன நோக்கி - தன் கூறனை, குறுகிலேன்; நெடும் காலம்
ஊனை, யான் இருந்து ஓம்புகின்றேன்; கெடுவேன் உயிர் ஓயாதே.

ஓய்வு இலாதன; உவமனில் இறந்தன; ஒண் மலர்த் தாள் தந்து?
நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும் என்னை, நல் நெறி காட்டி,
தாயில் ஆகிய இன் அருள் புரிந்த, என் தலைவனை நனி காணேன்;
தீயில் வீழ்கிலேன்; திண் வரை உருள்கிலேன்; செழும் கடல் புகுவேனே?

வேனில்வேள் கணை கிழித்திட, மதிசுடும்; அது-தனை நினையாதே,
மான் நிலாவிய நோக்கியர் படிறிடை மத்துஇடு தயிர் ஆகி,
தேன் நிலாவிய திருஅருள்புரிந்த, என் சிவன் நகர் புகப் போகேன்;
ஊனில் ஆவியை ஓம்புதல் பொருட்டு, இனும் உண்டு உடுத்து இருந்தேனே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. கைம்மாறு கொடுத்தல்

இரு கை யானையை ஒத்து இருந்தது, என் உளக்
கருவை யான் கண்டிலேன், கண்டது எவ்வமே,
'வருக' என்று பணித்தனை, வான் உளோர்க்கு
ஒருவனே! கிற்றிலேன்; கிற்பன், உண்ணவே.

'உண்டு ஓர் ஒண் பொருள்' என்று உணர்வார்க்கு எலாம்
பெண்டிர், ஆண், அலி என்று அறி ஒண்கிலை;
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்;
கண்டும் கண்டிலேன்; என்ன கண் மாயமே!

மேலை வானவரும் அறியாதது ஓர்
கோலமே, எனை ஆட்கொண்ட கூத்தனே,
ஞாலமே, விசும்பே, இவை வந்து போம்
காலமே! உனை என்று கொல் காண்பதே?

காணல் ஆம் பரமே, கட்கு இறந்தது ஓர்
வாள் நிலாப் பொருளே, இங்கு ஓர் பார்ப்பு என,
பாணனேன் படிற்று ஆக்கையை விட்டு, உனைப்
பூணும் ஆறு அறியேன் புலன் போற்றியே.

'போற்றி' என்றும், புரண்டும், புகழ்ந்தும் நின்று,
ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்;
ஏற்று வந்து எதிர், தாமரைத் தாள் உறும்
கூற்றம் அன்னது ஓர் கொள்கை - என் கொள்கையே.

கொள்ளும்கில் எனை அன்பரில் கூய்ப் பணி
கள்ளும், வண்டும், அறா மலர்க் கொன்றையான்,
நள்ளும், கீழ் உளும், மேல் உளும், யாவுளும்,
எள்ளும் எண்ணெயும் போல்; நின்ற எந்தையே?

எந்தை, யாய், எம்பிரான்; மற்றும் யாவருக்கும்
தந்தை, தாய், தம்பிரான், தனக்கு அஃகு இலான்,
முந்தி என்னுள் புகுந்தனன்- யாவரும்
சிந்தையாலும் அறிவு - அரும் செல்வனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம், நல்குரவு, இன்றி; விண்ணோர், புழு,
புல் வரம்பு இன்றி; யார்க்கும் அரும் பொருள்
எல்லை இல் கழல் கண்டும் பிரிந்தனன்;
கல் வகை மனத்தேன் பட்ட கட்டமே!

கட்டு அறுத்து, எனை ஆண்டு, கண் ஆர, நீறு
இட்ட அன்பரொடு, யாவரும் காணவே,
பட்டிமண்டபம் ஏற்றினை ; ஏற்றினை -
எட்டினோடு இரண்டும் அறியேனையே.

அறிவனே! அமுதே! அடி - நாயினேன்
அறிவன் ஆகக் கொண்டோ, எனை ஆண்டதும்?
அறிவு இலாமை அன்றே கண்டது, ஆண்ட நாள்?
அறிவனோ, அல்லனோ? அருள், ஈசனே!

## 6. அனுபோக சுத்தி

ஈசனே! என் எம்மானே!
எந்தை பெருமான்! என் பிறவி
நாசனே! நான் யாதும் ஒன்று
அல்லாப் பொல்லா நாய்ஆன
நீசனேனை ஆண்டாய்க்கு,
நினைக்கமாட்டேன் கண்டாயே;
தேசனே அம்பலவனே!
செய்வது ஒன்றும் அறியேனே.

செய்வது அறியாச் சிறு நாயேன்,
செம் பொன் பாத மலர் காணாப்
பொய்யர் பெறும் பேறு அத்தனையும்
பெறுதற்கு உரியேன்; பொய் இலா
மெய்யர் வெறி ஆர் மலர்ப் பாதம்
மேவக் கண்டும், கேட்டிருந்தும்,
பொய்யனேன் நான் உண்டு, உடுத்து, இங்கு
இருப்பது ஆனேன்; போர் ஏறே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் ஏறே! நின் பொன் - நகர்வாய்
நீ போந்தருளி, இருள் நீக்கி,
வார் ஏறு இள மென் முலையாளோடு
உடன் வந்தருள, அருள் பெற்ற
சீர் ஏறு அடியார் நின் பாதம்
சேரக் கண்டும், கண் கெட்ட
ஊர் ஏறு ஆய், இங்கு உழல்வேனோ?
கொடியேன் உயிர்-தான் உலவாதே!

உலவாக் காலம் தவம் எய்தி,
உறுப்பும் வெறுத்து, இங்கு உனைக் காண்பான்,
பல மா முனிவர் நனி வாட,
பாவியேனைப் பணி கொண்டாய்;
மல மாக் குரம்பை - இது மாய்க்க
மாட்டேன்; மணியே, உனைக் காண்பான்;
அலவாநிற்கும் அன்பு இலேன்;
என் கொண்டு எழுகேன், எம்மானே?

மான் நேர் நோக்கி உமையாள்
பங்கா! வந்து இங்கு ஆட்கொண்ட
தேனே! அமுதே! கரும்பின்
தெளிவே! சிவனே! தென் தில்லைக்
கோனே! உன் - தன் திருக்குறிப்புக்
கூடுவார் நின் கழல் கூட,
ஊன் ஆர் புழுக்கூடு - அது காத்து, இங்கு
இருப்பது ஆனேன்; உடையானே!

உடையானே! நின் - தனை உள்கி,
உள்ளம் உருகும், பெரும் காதல்
உடையார், உடையாய்! நின் பாதம்
சேரக் கண்டு, இங்கு ஊர் நாயின்
கடை ஆனேன், நெஞ்சு உருகாதேன்,
கல்லா மனத்தேன், கசியாதேன்,
முடை ஆர் புழுக் கூடு - இது காத்து, இங்கு
இருப்பது ஆக முடித்தாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்த ஆறும், என் தனக்கே
தக்கதே; முன், அடியாரைப்
பிடித்த ஆறும், சோராமல்
சோரனேன் இங்கு - ஒருத்தி வாய்
துடித்த ஆறும், துகில் இறையே
சோர்ந்த ஆறும், முகம் குறு வேர்
பொடித்த ஆறும், இவை உணர்ந்து
கேடு என் - தனக்கே சூழ்ந்தேனே.

தேனை, பாலை, கன்னலின்
தெளிவை, ஒளியை, தெளிந்தார் தம்
ஊனை உருக்கும் உடையானை,
உம்பரானை, வம்பனேன்,
'நான் நின் அடியேன்; நீ என்னை
ஆண்டாய்' என்றால், அடியேற்குத்
தானும் சிரித்தே, அருளலாம்
தன்மை ஆம், என் தன்மையே.

தன்மை பிறரால் அறியாத
தலைவா! பொல்லா நாய் ஆன
புன்மையேனை ஆண்டு, ஐயா!
புறமே போக விடுவாயோ?
என்னை நோக்குவார் யாரே?
என் நான் செய்கேன்? எம்பெருமான்!
பொன்னே திகழும் திருமேனி
எந்தாய் எங்குப் புகுவேனே?

புகுவேன், எனதே நின் பாதம்;
போற்றும் அடியார் உள் நின்று
நகுவேன், பண்டு தோள் நோக்கி
நாணம் இல்லா நாயினேன்.
நெகும் அன்பு இல்லை, நினைக் காண;
நீ ஆண்டு அருள, அடியேனும்
தகுவனே? என் தன்மையே!
எந்தாய், அந்தோ! தரியேனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. காருணியத்து இரங்கல்

தரிக்கிலேன் காய வாழ்க்கை; சங்கரா, போற்றி! வான
விருத்தனே, போற்றி! எங்கள் விடலையே, போற்றி! ஒப்பு இல்
ஒருத்தனே, போற்றி! உம்பர் தம்பிரான், போற்றி! தில்லை
நிருத்தனே, போற்றி! எங்கள் நின்மலா போற்றி! போற்றி!

போற்றி! ஓம் நமச்சிவாய! புயங்கனே, மயங்குகின்றேன்
போற்றி! ஓம் நமச்சிவாய! புகல் இடம் பிறிது ஒன்று இல்லை!
போற்றி! ஓம் நமச்சிவாய! புறம் எனைப் போக்கல், கண்டாய்;
போற்றி! ஓம் நமச்சிவாய! சய! சய! போற்றி! போற்றி!

போற்றி! என் போலும் பொய்யர் - தம்மை ஆட்கொள்ளும் வள்ளல்
போற்றி! நின் பாதம் போற்றி! நாதனே, போற்றி! போற்றி!
போற்றி! நின் கருணை வெள்ளப் புதுமது புவனம், நீர், தீ,
காற்று, இயமானன், வானம், இரு சுடர்க் கடவுளானே!

கடவுளே போற்றி! என்னைக் கண்டுகொண்டு, அருளு, போற்றி!
விட, உளே உருக்கி என்னை ஆண்டிட வேண்டும், போற்றி!
உடல்-இது களைந்திட்டு, ஒல்லை உம்பர் தந்து அருளு, போற்றி!
சடையுளே கங்கை வைத்த சங்கரா, போற்றி! போற்றி!

சங்கரா போற்றி! மற்று ஓர் சரண் இலேன்; போற்றி! கோலப்
பொங்கு அரா அல்குல், செவ்வாய், வெள் நகை, கரியவாள் கண்,
மங்கை ஓர் பங்க, போற்றி! மால் விடை ஊர்தி, போற்றி!
இங்கு, இவ் வாழ்வு ஆற்றகில்லேன்; எம்பிரான்! இழித்திட்டேனே.

இழித்தனன் என்னை யானே; எம்பிரான், போற்றி! போற்றி!
பழித்திலேன் உன்னை; என்னை ஆளுடைப் பாதம் போற்றி!
பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை; போற்றி!
ஒழித்திடு இவ் வாழ்வு; போற்றி! உம்பர் நாட்டு எம்பிரானே!

எம்பிரான், போற்றி! வானத்தவர் - அவர் ஏறு, போற்றி!
கொம்பர் ஆர் மருங்குல் மங்கை கூற, வெள் நீற, போற்றி!
செம்பிரான், போற்றி! தில்லைத் திருச்சிற்றம்பலவ, போற்றி!
உம்பரா போற்றி! என்னை ஆளுடை ஒருவ போற்றி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனே போற்றி! ஒப்பு இல் அப்பனே, போற்றி! வானோர்
குருவனே, போற்றி! எங்கள் கோமளக் கொழுந்து, போற்றி!
'வருக' என்று என்னை நின்பால் வாங்கிட வேண்டும், போற்றி!
தருக நின் பாதம், போற்றி! தமியனேன் தனிமை தீர்த்தே.

தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப, போற்றி!
பேர்ந்தும், என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும் பெருமை போற்றி!
வார்ந்த நஞ்சு அயின்று, வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல், போற்றி!
ஆர்ந்த நின் பாதம், நாயேற்கு அருளிடவேண்டும், போற்றி!

போற்றி! இப் புவனம், நீர், தீ, காலொடு, வானம் ஆனாய்;
போற்றி! எவ் உயிர்க்கும் தோற்றம் ஆகி, நீ, தோற்றம் இல்லாய்;
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறு ஆய், ஈறு இன்மை ஆனாய்;
போற்றி! ஐம்புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

## 8. ஆனந்தத்து அழுந்தல்

புணர்ப்பது ஒக்க, எந்தை! என்னை ஆண்டு, பூண நோக்கினாய்;
புணர்ப்பது அன்று இது என்ற போது, நின்னொடு, என்னொடு, என் இதுஆம்
புணர்ப்பது ஆக, அன்று இது ஆக, அன்பு நின் கழல்கணே
புணர்ப்பது ஆக, அம் கணாள, புங்கம் ஆன போகமே!

போகம் வேண்டி, வேண்டிலேன், புரந்தரன் ஆதி இன்பமும்;
ஏக! நின் கழல் - இணை அலாது இலேன், என் எம்பிரான்;
ஆகம் வீண்டு, கம்பம் வந்து, குஞ்சி அஞ்சலிக்கணே
ஆக, என் கை; கண்கள் தாரை, ஆறு, அது ஆக; ஐயனே!

ஐய நின்னது அல்லது இல்லை, மற்று ஓர் பற்று; வஞ்சனேன்;
பொய் கலந்தது அல்லது இல்லை; பொய்ம்மையேன்; என் எம்பிரான்;
மை கலந்த கண்ணி பங்க, வந்து நின் கழல்கணே
மெய் கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆகவேண்டுமே.

வேண்டும், நின் கழல்கண் அன்பு; பொய்ம்மை தீர்த்து, மெய்ம்மையே
ஆண்டுகொண்டு, நாயினேனை, 'ஆவ' என்று அருளு, நீ;
பூண்டுகொண்டு அடியனேனும் 'போற்றி! போற்றி!' என்றும், என்றும்
மாண்டு மாண்டு; வந்து வந்து, மன்ன! நின் வணங்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணாங்கும் நின்னை, மண்ணும், விண்ணும், வேதம் நான்கும் ஓலம் இட்டு
உணங்கும், நின்னை எய்தல் உற்று, மற்று ஓர் உண்மை இன்மையின்
வணங்கி, யாம் விடேங்கள் என்ன; வந்து நின்று அருளுதற்கு;
இணங்கு கொங்கை மங்கை பங்க! என் கொலோ நினைப்பதே?

நினைப்பது ஆக சிந்தை செல்லும் எல்லை; ஏய வாக்கினால்
தினைத்தனையும் ஆவது இல்லை; சொல்லல் ஆவ கேட்பவே;
அனைத்து உலகும் ஆய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா;
எனைத்து; எனைத்து அது; எப் புறத்து அது எந்தை பாதம் எய்தவே?

எய்தல் ஆவது என்று, நின்னை; எம்பிரான்? இவ் வஞ்சனேற்கு
உய்தல் ஆவது; உன்கண் அன்றி, மற்று ஓர் உண்மை இன்மையின்,
பைதல் ஆவது என்று பாதுகாத்து இரங்கு; பாவியேற்கு
இஃது அலாது, நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை, ஈசனே!

ஈசனே! நீ அல்லது இல்லை இங்கும் அங்கும் என்பதும்,
பேசினேன் - ஓர் பேதம் இன்மை பேதையேன், என் எம்பிரான்!
நீசனேனை ஆண்டுகொண்ட நின்மலா! ஓர் நின் அலால்,
தேசனே! ஓர் தேவர் உண்மை சிந்தியாது; சிந்தையே.

சிந்தை, செய்கை; கேள்வி; வாக்கு; சீர் இல் ஐம் புலன்களால்,
முந்தை ஆன காலம் நின்னை எய்திடாத மூர்க்கனேன்,
வெந்து, ஐயா, விழுந்திலேன்; என் உள்ளம் வெள்கி விண்டிலேன்!
எந்தை ஆய நின்னை, இன்னம் எய்தல் உற்று; இருப்பனே.

இருப்பு நெஞ்ச வஞ்சனேனை ஆண்டுகொண்ட நின்ன தாள்
கருப்பு மட்டு வாய் மடுத்து; எனைக் கலந்து போகவும்,
நெருப்பும் உண்டு; யானும் உண்டு இருந்தது உண்டது; அது ஆயினும்
விருப்பும் உண்டு நின்கண் என்கண் என்பது என்ன விச்சையே!

## 9. ஆனந்த பரவசம்

விச்சுக் கேடு பொய்க்கு ஆகாது என்று; இங்கு எனை வைத்தாய்;
இச்சைக்கு ஆனார் எல்லாரும் வந்து, உன் தாள் சேர்ந்தார்;
அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன்; ஆரூர் எம்
பிச்சைத் தேவா, என் நான் செய்கேன்; பேசாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப்பட்டேன் நின் அடியாரில்; திருநீறே
பூசப்பட்டேன்; பூதலரால், உன் அடியான் என்று,
ஏசப்பட்டேன்; இனிப் படுகின்றது அமையாதால்,
ஆசைப்பட்டேன்; ஆட்பட்டேன்; உன் அடியேனே.

அடியேன்அல்லேன் - கொல்லோ; தான் எனை ஆட்கொண்டிலை கொல்லோ?
அடியார் ஆனார் எல்லாரும் வந்து, உன் தாள் சேர்ந்தார்;
செடி சேர் உடலம் - இது, நீக்க மாட்டேன்; எங்கள் சிவலோகா!
கடியேன் உன்னை, கண் ஆரக் காணும் ஆறு, காணேனே.

காணும் ஆறு காணேன்; உன்னை அந் நாள் கண்டேனும்
பாணே பேசி, என் - தன்னைப் படுத்தது என்ன? பரஞ்சோதி!
ஆணே, பெண்ணே, ஆர் அமுதே, அத்தா, செத்தே போயினேன்;
ஏண் நாண் இல்லா நாயினேன், என் கொண்டு எழுகேன் எம்மானே?

மான் நேர் நோக்கி, உமையாள் பங்கா, மறை ஈறு அறியா மறையோனே
தேனே, அமுதே சிந்தைக்கு அரியாய், சிறியேன் பிழைபொறுக்கும்
கோனே, சிறிதே கொடுமை பறைந்தேன்; சிவ மா நகர் குறுகப்
போனார் அடியார்; யானும், பொய்யும், புறமே போந்தோமே.

புறமே போந்தோம் பொய்யும், யானும், மெய் அன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன் யான்,
அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்று ஒன்று அறியாதார்;
சிறவே செய்து வழிவந்து, சிவனே! நின்தாள் சேர்ந்தாரே.

தாராய், உடையாய்! அடியேற்கு உன்தாள் இணை அன்பு
பேரா உலகம் புக்கார் அடியார்; புறமே போந்தேன் யான்;
ஊர் ஆ மிலைக்கக் குருட்டு ஆ மிலைத்திங்கு, உன் தாள் இணை அன்புக்கு
ஆரா அடியேன், அயலே மயல்கொண்டு, அழுகேனே.

அழுகேன், நின்பால் அன்பு ஆம் மனம் ஆய்; அழல் சேர்ந்த
மெழுகே அன்னார், மின் ஆர், பொன் ஆர், கழல் கண்டு
தொழுதே, உன்னைத் தொடர்ந்தாரோடும் தொடராதே,
பழுதே பிறந்தேன், என் கொண்டு உன்னைப் பணிகேனே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிவார் பிணி தீர்த்தருளி, பழைய அடியார்க்கு உன்
அணி ஆர் பாதம் கொடுத்தி, அதுவும் அரிது என்றால்
திணி ஆர் மூங்கில் அனையேன், வினையைப் பொடி ஆக்கி,
தணி ஆர் பாதம், வந்து, ஒல்லை தாராய்; பொய் தீர் மெய்யானே!

யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய்;
ஆனால் வினையேன் அழுதால், உன்னைப் பெறலாமே?
தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, தித்திக்கும்
மானே, அருளாய் - அடியேன் உனை வந்து உறுமாறே.

## 10. ஆனந்தாதீதம்

மாறு இலாத மாக் கருணை வெள்ளமே!
வந்து முந்தி நின் மலர்கொள் தாள் - இணை,
வேறு இலாப் பதப் பரிசு பெற்ற, நின்
மெய்ம்மை அன்பர், உன் மெய்ம்மை மேவினார்;
ஈறு இலாத நீ, எளியை ஆகி வந்து,
ஒளி செய் மானுடம் ஆக, நோக்கியும்,
கீறு இலாத நெஞ்சு உடையன் ஆயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே.

மை இலங்கு நல் கண்ணி பங்கனே!
வந்து எனைப் பணிகொண்ட பின், மழக்
கை இலங்கு பொன் கிண்ணம் என்று அலால்,
அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்,
மெய் இலங்கு வெண்ணீற்று மேனியாய்,
மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினார்;
பொய்யில் அங்கு எனைப் புகுதவிட்டு, நீ
போவதோ? சொலாய், பொருத்தும் ஆவதே?

பொருத்தம் இன்மையேன்; பொய்ம்மை உண்மையேன்;
போத என்று எனைப் புரிந்து நோக்கவும்,
வருத்தம் இன்மையேன்; வஞ்சம் உண்மையேன்;
மாண்டிலேன்; மலர்க்கமல பாதனே,
அரத்த மேனியாய், அருள்செய் அன்பரும்
நீயும், அங்கு எழுந்தருளி, இங்கு எனை
இருத்தினாய்; முறையோ? என் எம்பிரான்,
வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை நின் கழற்கு அன்பு - அது என்கணே!
ஏலம் ஏலும் நல் குழலி பங்கனே!
கல்லை மென் கனி ஆக்கும் விச்சை கொண்டு,
என்னை நின் கழற்கு அன்பன் ஆக்கினாய்
எல்லை இல்லை நின் கருணை; எம்பிரான்
ஏது கொண்டு; நான் ஏது செய்யினும்,
வல்லையே - எனக்கு இன்னும் உன் கழல்
காட்டி, மீட்கவும், மறு இல் வானனே?

வான நாடரும் அறி ஒணாத நீ,
மறையில் ஈறும் முன் தொடர் ஒணாத நீ,
ஏனை நாடரும் தெரி ஒணாத நீ,
என்னை இன்னிதாய் ஆண்டுகொண்டவா,
ஊனை நாடகம் ஆடுவித்தவா,
உருகி; நான் உனைப் பருக வைத்தவா,
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத்துடைய விச்சையே!

விச்சு அது இன்றியே, விளைவு செய்குவாய்;
விண்ணும், மண்ணகம் முழுவதும் யாவையும்,
வைச்சு வாங்குவாய், வஞ்சகப் பெரும்
புலையனேனை; உன் கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய், பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய் தாம் வளர்த்தது, ஓர்
நச்சு மா மரம் ஆயினும், கொலார்
நானும் அங்ஙனே, உடைய நாதனே!

உடைய நாதனே, போற்றி! நின் அலால்
பற்று, மற்று எனக்கு ஆவது ஒன்று இனி
உடையனோ? பணி; போற்றி! உம்பரார்
தம் பரா பரா போற்றி! யாரினும்
கடையன் ஆயினேன்; போற்றி! என் பெரும்
கருணையாளனே; போற்றி! என்னை, நின்
அடியன் ஆக்கினாய்; போற்றி! ஆதியும்,
அந்தம்; ஆயினாய், போற்றி! அப்பனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனே எனக்கு அமுதனே

ஆனந்தனே, அகம் நெக அள்ளூறு தேன்

ஒப்பனே, உனக்கு உரிய அன்பரில்

உரியனாய், உனைப் பருக நின்றது ஓர்

துப்பனே; சுடர் முடியனே, துணையாளனே,

தொழும்பாளர் எய்ப்பினில்

வைப்பனே; எனை வைப்பதோ, சொலாய்

நைய வையகத்து, எங்கள் மன்னனே?

மன்ன, எம்பிரான் 'வருக' என் எனை;

மாலும், நான்முகத்து ஒருவன், யாரினும்

முன்ன, எம்பிரான், 'வருக' என் எனை;

முழுதும் யாவையும் இறுதி உற்ற நாள்

பின்ன; எம்பிரான், 'வருக' என் எனை;

பெய்கழற்கண் அன்பாய், என் நாவினால்

பன்ன, எம்பிரான் 'வருன' என் எனை

பாவநாச நின் சீர்கள் பாடவே.

பாட வேண்டும் நான்; போற்றி! நின்னையே

பாடி, நைந்து நைந்து உருகி, நெக்கு நெக்கு

ஆட வேண்டும் நான்; போற்றி! அம்பலத்து

ஆடும் நின் கழல் போது, நாயினேன்

கூட வேண்டும் நான்; போற்றி! இப் புழுக்

கூடு நீக்கு எனை; போற்றி! பொய் எலாம்

வீட வேண்டும் நான்; போற்றி! வீடு தந்து

அருளு; போற்றி! நின் மெய்யர் மெய்யனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தல் விண்ணப்பம்

கடையவனேனைக் கருணையினால் கலந்து, ஆண்டுகொண்ட
விடையவனே, விட்டிடுதி கண்டாய்? விறல் வேங்கையின் தோல்
உடையவனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே,
சடையவனே, தளர்ந்தேன்; எம்பிரான், என்னைத் தாங்கிக்கொள்ளே.

கொள் ஏர் பிளவு அகலாத் தடம் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும், விடுதி கண்டாய்? நின் விழுத் தொழும்பின்
உள்ளேன்; புறம் அல்லேன்; உத்தரகோசமங்கைக்கு அரசே,
கள்ளேன் ஒழியவும், கண்டு கொண்டு ஆண்டது எக் காரணமே?

கார் உறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய்
வேர் உறுவேனை விடுதி கண்டாய்? விளங்கும் திருவா
ரூர் உறைவாய், மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே,
வார் உறு பூண் முலையாள் பங்க, என்னை வளர்ப்பவனே.

வளர்கின்ற நின் கருணைக் கையில் வாங்கவும் நீங்கி, இப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதி கண்டாய்? வெண் மதிக் கொழுந்து ஒன்று
ஒளிர்கின்ற நீள் முடி உத்தரகோசமங்கைக்கு அரசே
தெளிகின்ற பொன்னும், மின்னும், அன்ன தோற்றம் செழும் சுடரே.

செழிகின்ற தீப் புகு விட்டிலின், சில் மொழியாரில் பல் நாள்
விழுகின்ற என்னை விடுதி கண்டாய்? வெறி வாய் அறுகால்
உழுகின்ற பூ முடி உத்தரகோசமங்கைக்கு அரசே
வழி நின்று, நின் அருள் ஆர் அமுது ஊட்ட மறுத்தனனே.

மறுத்தனன் யான், உன் அருள் அறியாமையின், என் மணியே;
வெறுத்து எனை நீ விட்டிடுதி கண்டாய்? வினையின் தொகுதி
ஒறுத்து, எனை ஆண்டுகொள்; உத்தரகோசமங்கைக்கு அரசே
பொறுப்பர் அன்றே பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினையே?

பொய்யவனேனைப் பொருள் என ஆண்டு, ஒன்று பொத்திக் கொண்ட
மெய்யவனே, விட்டிடுதி கண்டாய்? - விடம் உண் மிடற்று
மையவனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே,
செய்யவனே, சிவனே, சிறியேன் பவம் தீர்ப்பவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கின்ற ஆறுஎன் பிழையை 'நின்சீர் அருள் என் கொல்?' என்று
வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய்? விரவார் வெருவ,
ஆர்க்கின்ற தார் விடை உத்தரகோசமங்கைக்கு அரசே,
ஈர்க்கின்ற - அஞ்சொடு அச்சம் வினையேனை இருதலையே.

இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து, நினைப் பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய்? வியன் மூவுலகுக்கு
ஒரு தலைவா, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே
பொருது தலை மூவிலை வேல் வலன் ஏந்திப் பொலிபவனே.

பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்று, ஆக்கையைப் போக்கப் பெற்று
மெலிகின்ற என்னை விடுதி கண்டாய்? அளி தேர் விளரி
ஒலி நின்ற பூம் பொழில் உத்தரகோசமங்கைக்கு அரசே,
வலி நின்ற திண் சிலையால் எரித்தாய் புரம், மாறுபட்டே.

மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப, யான் உன் மணி மலர்த்தாள்
வேறுபட்டேனை விடுதி கண்டாய் வினையேன் மனத்தே
ஊறும் மட்டே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே
நீறு பட்டே ஒளி காட்டும் பொன் மேனி நெடுந்தகையே.

நெடுந்தகை, நீ என்னை ஆட்கொள்ள யான் ஐம்புலன்கள் கொண்டு
விடும் தகையேனை விடுதி கண்டாய்? விரவார் வெருவ,
அடும் தகை வேல் வல்ல உத்தரகோசமங்கைக்கு அரசே
கடும் தகையேன் உண்ணும் தெள் நீர் அமுதப் பெரும் கடலே.

கடலினுள் நாய் நக்கி - ஆங்கு, உன் கருணைக் கடலின் உள்ளம்
விடல் அரியேனை விடுதி கண்டாய்? விடல் இல் அடியார்
உடல் இலமே மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே
மடலின் மட்டே, மணியே, அமுதே, என் மது வெள்ளமே.

வெள்ளத்துள் நா வற்றி - ஆங்கு, உன் அருள் பெற்றுத் துன்பத்து இன்றும்
விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்? விரும்பும் அடியார்
உள்ளத்து உள்ளாய், மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே
கள்ளத்து உளேற்கு, அருளாய் களியாத களி எனக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிவந்த சிந்தையொடு உன் கழல் கண்டும், கலந்தருள
வெளி வந்திலேனை விடுதி கண்டாய்? மெய்ச் சுடருக்கு எல்லாம்
ஒளிவந்த பூம் கழல் உத்தரகோசமங்கைக்கு அரசே
எளிவந்த எந்தை பிரான், என்னை ஆளுடை என் அப்பனே!

என்னை 'அப்பா, அஞ்சல்' என்பவர் இன்றி நின்று எய்த்து அலைந்தேன்;
மின்னை ஒப்பாய், விட்டிடுதி கண்டாய்? உவமிக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய், மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே
அன்னை ஒப்பாய், எனக்கு அத்தன் ஒப்பாய்; என் அரும் பொருளே!

பொருளே, தமியேன் புகல் இடமே, நின் புகழ் இகழ்வார்
வெருளே, எனை விட்டிடுதி கண்டாய்? மெய்ம்மையார் விழுங்கும்
அருளே, அணி பொழில் உத்தரகோசமங்கைக்கு அரசே
இருளே, வெளியே, இக பரம் ஆகி இருந்தவனே.

'இருந்து என்னை ஆண்டுகொள்; விற்றுக்கொள்; ஒற்றிவை' என்னின் அல்லால்
விருந்தினனேனை, விடுதி கண்டாய்? மிக்க நஞ்சு அமுதா
அருந்தினனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே,
மருந்தினனே பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கே.

மடங்க என் வல் வினைக் காட்டை, நின் மன் அருள் தீக் கொளுவும்
விடங்க என் தன்னை விடுதி கண்டாய்? என் பிறவியை வே
ரொடும் களைந்து ஆண்டுகொள்; உத்தரகோசமங்கைக்கு அரசே,
கொடும் கரிக்குன்று உரித்து, அஞ்சுவித்தாய், வஞ்சிக் கொம்பினையே.

கொம்பர் இல்லாக் கொடிபோல், அலமந்தனன்; கோமளமே,
வெம்புகின்றேனை விடுதி கண்டாய்? விண்ணார் நண்ணுகில்லா
உம்பர் உள்ளாய்; மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே,
அம்பரமே, நிலனே, அனல், காலொடு அப்பு, ஆனவனே.

ஆனை வெம் போரில், குறும் தூறு எனப் புலனால் அலைப்புண்
டேனை எந்தாய், விட்டிடுதி கண்டாய்? வினையேன் மனத்துத்
தேனையும், பாலையும், கன்னலையும், அமுதத்தையும், ஒத்து,
ஊனையும், என்பினையும், உருக்கா நின்ற ஒண்மையனே.

ஒண்மையனே, திருநீற்றை உத்தூளித்து, ஒளி மிளிரும்
வெண்மையனே, விட்டிடுதி கண்டாய், மெய் அடியவர்கட்கு
அண்மையனே, என்றும் சேயாய் பிறர்க்கு; அறிதற்கு அரிது ஆம்
பெண்மையனே, தொன்மை ஆண்மையனே, அலிப் பெற்றியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது கொண்டு, பிழையே பெருக்கி, சுருக்கும் அன்பின்
வெற்று அடியேனை, விடுதி கண்டாய்? விடிலோ கெடுவேன்
மற்று, அடியேன் தன்னை, தாங்குநர் இல்லை; என் வாழ் முதலே
உற்று, அடியேன், மிகத் தேறி நின்றேன்; எனக்கு உள்ளவனே.

உள்ளனவே நிற்க, இல்லன செய்யும் மையல் துழனி
வெள்ளன் அலேனை விடுதி கண்டாய்? வியன் மாத் தடக் கைப்
பொள்ளல் நல் வேழத்து உரியாய், புலன், நின்கண் போதல் ஒட்டா,
மெள்ளனவே மொய்க்கும் நெய்க் குடம் தன்னை எறும்பு எனவே.

எறும்பிடை நாங்கூழ் என, புலனால் அரிப்புண்டு, அலந்த
வெறும் தமியேனை விடுதி கண்டாய்? வெய்ய கூற்று ஒடுங்க
உறும் கடிப் போது - அவையே உணர்வு உற்றவர் உம்பர் உம்பர்
பெறும் பதமே, அடியார் பெயராத பெருமையனே.

பெரு நீர் அற, சிறு மீன் துவண்டு - ஆங்கு, நினைப்பிரிந்த
வெரு நீர்மையேனை விடுதி கண்டாய்? வியன் கங்கை பொங்கி
வரும் நீர் மடுவுள், மலைச் சிறு தோணி வடிவின், வெள்ளைக்
குரு நீர் மதி பொதியும் சடை, வானக் கொழு மணியே!

கொழும் மணி ஏர் நகையார் கொங்கைக் குன்றிடைச் சென்று, குன்றி
விழும் அடியேனை விடுதி கண்டாய்? மெய்ம் முழுதும் கம்பித்து,
அழும் அடியாரிடை ஆர்த்து வைத்து, ஆட்கொண்டருளி, என்னைக்
கழு மணியே, இன்னும் காட்டு கண்டாய் நின் புலன் கழலே.

புலன்கள் திகைப்பிக்க, யானும் திகைத்து, இங்கு ஓர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின்றேனை விடுதி கண்டாய்? விண்ணும், மண்ணும்,
எல்லாம்கலங்க, முந்நீர் நஞ்சு அமுது செய்தாய், கருணாகரனே!
துலங்குகின்றேன் அடியேன்; உடையாய், என் தொழுகுலமே!

குலம் களைந்தாய்; களைந்தாய் என்னைக் குற்றம் கொற்றச்சிலை ஆம்
விலங்கல் எந்தாய், விட்டிடுதி கண்டாய்? பொன்னின் மின்னு கொன்றை
அலங்கல் அம் தாமரை மேனி அப்பா, ஒப்பு இலாதவனே,
மலங்கள் ஐந்தால் சுழல்வன், தயிரில் பொரு மத்து உறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்து உறு தண் தயிரின், புலன் தீக் கதுவக் கலங்கி,
வித்து உறுவேனை விடுதி கண்டாய்? வெண் தலை மிலைச்சிக்
கொத்து உறு போது மிலைந்து குடர் நெடு மாலை சுற்றித்
தத்து உறு நீறுடன் ஆரச் செம் சாந்து அணி சச்சையனே.

சச்சையனே, மிக்க தண் புனல், விண், கால், நிலம், நெருப்பு, ஆம்
விச்சையனே, விட்டிடுதி கண்டாய்? வெளியாய், கரியாய்
பச்சையனே, செய்ய மேனியனே, ஒண் பட அரவக்
கச்சையனே - கடந்தாய் தடம் தாள அடல் கரியே.

அடல் கரி போல், ஐம் புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை
விடற்கு அரியாய், விட்டிடுதி கண்டாய்? விழுத்தொண்டர்க்கு அல்லால்
தொடற்கு அரியாய், சுடர் மா மணியே, சுடு தீச் சுழல,
கடல் கரிது ஆய் எழு நஞ்சு அமுது ஆக்கும் கறைக்கண்டனே.

கண்டது செய்து, கருணை மட்டுப் பருகிக் களித்து,
மிண்டுகின்றேனை விடுதி கண்டாய்? நின் விரை மலர்த்தாள்
பண்டு தந்தால் போல் பணித்து, பணி செயக் கூவித்து, என்னைக்
கொண்டு; என் எந்தாய், களையாய், களை யாய குதுகுதுப்பே.

குதுகுதுப்பு இன்றி நின்று, என் குறிப்பே செய்து; நின் குறிப்பில்
விதுவிதுப்பேனை விடுதி கண்டாய்? விரை ஆர்ந்து, இனிய
மது மதுப் போன்று, என்னை வாழைப் பழத்தில் மனம் கனிவித்து,
எதிர்வது எப்போது பயில்விக் கயிலைப் பரம்பரனே!

பரம்பரனே; நின் பழ அடியாரொடும் என் படிறு
விரும்ப அரனே; விட்டிடுதி கண்டாய்? மென் முயல் கறையின்
அரும்பு, அர நேர் வைத்து அணிந்தாய், பிறவி ஐவாய் அரவம்
பொரும், பெருமான் வினையேன் மனம் அஞ்சிப் பொதும்பு உறவே.

பொதும்பு உறு தீப்போல் புகைந்து எரிய; புலன் தீக் கதுவ;
வெதும்புறுவேனை விடுதி கண்டாய்; விரை ஆர் நறவம்
ததும்பும் மந்தாரத்தில் தாரம் பயின்று, மந்தம் முரல் வண்டு
அதும்பும்; கொழும் தேன் அவிர் சடைவானத்து அடல் அரைசே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைசே, அறியாச் சிறியேன் பிழைக்கு 'அஞ்சல்' என்னின் அல்லால்
விரை சேர் முடியாய்; விடுதி கண்டாய்? வெள் நகை, கரும் கண்;
திரை சேர் மடந்தை மணந்த திருப்பொன் பதப் புயங்கா,
வரை சேர்ந்து அடர்ந்து என்ன வல்வினை தான் வந்து அடர்வனவே.

அடல் புலனால், நின் பிரிந்து அஞ்சி, அம் சொல் நல்லார் அவர் தம்
விடர் விடலேனை விடுதி கண்டாய்? விரிந்தே எரியும்
சுடர் அனையாய், சுடுகாட்டு அரசே தொழும்பர்க்கு அமுதே.
தொடர்வு அரியாய் தமியேன் தனி நீக்கும் தனித் துணையே.

தனித் துணை நீ நிற்க, யான் தருக்கி, தலையால் நடந்த
வினைத் துணையேனை விடுதி கண்டாய்? வினையேனுடைய
மனத்துணையே, என் தன் வாழ் முதலே, எனக்கு எய்ப்பில் வைப்பே,
தினைத்துணையேனும் பொறேன், துயர் ஆக்கையின் திண்வலையே.

வலைத்தலை மான் அன்ன நோக்கியர் நோக்கின் வலையில் பட்டு,
மிலைத்து அலைந்தேனை விடுதி கண்டாய்? வெண்மதியின் ஒற்றைக்
கலைத் தலையாய், கருணாகரனே, கயிலாயம் என்னும்
மலைத் தலைவா, மலையாள் மணவாளா என் வாழ் முதலே

முதலைச் செவ் வாய்ச்சியர் வேட்கை வெந்நீரில் கடிப்ப மூழ்கி,
விதலைச் செய்வேனை விடுதி கண்டாய்? விடக்கு ஊன் மிடைந்த
சிதலைச் செய் காயம் பொறேன், சிவனே, முறையோ? முறையோ?
திதலைச் செய் பூண் முலை மங்கை பங்கா, என் சிவகதியே!

கதி அடியேற்கு உன் கழல் தந்தருளவும், ஊன் கழியா
விதி அடியேனை விடுதி கண்டாய்? வெள் தலை முழையில்
பதி உடை வாள் அரப் பார்த்து, இறை பைத்துச் சுருங்க, அஞ்சி,
மதி நெடு நீரில் குளித்து, ஒளிக்கும் சடை மன்னவனே.

மன்னவனே, ஒன்றும் ஆறு அறியாச்சி றியேன் மகிழ்ச்சி
மின்னவனே, விட்டிடுதி கண்டாய்? - மிக்க வேத மெய்ந் நூல்
சொன்னவனே, சொல் கழிந்தவனே, கழியாத் தொழும்பர்
முன்னவனே, பின்னும் ஆனவனே, இம் முழுதையுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுது அயில் வேல் கண்ணியர் என்னும் மூரித் தழல் முழுகும்
விழுது அனையேனை விடுதி கண்டாய்? நின் வெறி மலர்த் தாள்
தொழுது செல் வானத் தொழும்பரில் கூட்டிடு; 'சோத்தம்' பிரான்
பழுது செய்வேனை விடேன், உடையாய் உன்னைப் பாடுவனே.

பாடிற்றிலேன், பணியேன், மணி, நீ ஒளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேனை விடுதி கண்டாய்? வியந்து, ஆங்கு அலறித்
தேடிற்றிலேன், சிவன் எவ் இடத்தான்? எவர் கண்டனர்? என்று
ஓடிற்றிலேன், கிடந்து உள் உருகேன்; நின்று உழைத்தனனே.

உழைதரு நோக்கியர் கொங்கை, பலாப்பழத்து ஈயின் ஒப்பாய்,
விழைதருவேனை விடுதி கண்டாய்? விடின் 'வேலை நஞ்சு உண்
மழைதரு கண்டன், குணம் இலி மானிடன், தேய் மதியன்,
பழைதரு மா பரன்' என்று அறைவன் பழிப்பினையே.

பழிப்பு இல் நின் பாதப் பழம் தொழும்பு எய்தி, விழுப் பழித்து
விழித்திருந்தேனை விடுதி கண்டாய்? வெண் மணிப் பணிலம்
கொழித்து, மந்தாரம் மந்தாகினி நுந்தும், பந்தப் பெருமை
தழிச் சிறை நீரில், பிறைக் கலம் சேர்தரு தாரவனே.

தாரகை போலும் தலைத் தலை, மாலை, தழல் அரப் பூண்
வீர, என் - தன்னை விடுதி கண்டாய்? விடின், என்னை மிக்கார்
'ஆர் அடியான்' என்னின், உத்தரகோசமங்கைக்கு அரசின்
சீர் அடியார் அடியான்' என்று நின்னைச் சிரிப்பிப்பனே.

சிரிப்பிப்பன், சீறும் பிழைப்பை; தொழும்பையும் ஈசற்கு' என்று
விரிப்பிப்பன், என்னை விடுதி கண்டாய்? விடின் வெம் கரியின்
உரிப் பிச்சன், தோல் உடைப் பிச்சன், நஞ்சு ஊண் பிச்சன், ஊர்ச் சுடுகாட்டு
எரிப் பிச்சன், என்னையும் ஆளுடைப் பிச்சன் என்று ஏசுவனே.

ஏசினும், யான், உன்னை ஏத்தினும், என் பிழைக்கே குழைந்து
வேசறுவேனை விடுதி கண்டாய்? செம் பவள வெற்பின்
தேசு உடையாய், என்னை ஆளுடையாய், சிற்றுயிர்க்கு இரங்கி,
காய் சின ஆலம் உண்டாய் அமுது உண்ணக் கடையவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே எந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.
1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.
2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணரா உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தொன்னாளன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனைப் பாடேலோர் எம்பாவாய்.

8

முன்னைப் பழும்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோ மேலோர் எம்பாவாய்.

9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகே ரெனக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற்காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

13

காதார் குழையாடப் கைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போங் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லாதோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

20

திருவெம்பாவை முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு அம்மானை

செம் கண் நெடுமாலும் சென்று இடந்தும், காண்பு அரிய
பொங்கு மலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி,
எங்கள் பிறப்பு அறுத்திட்டு, எம் தரமும் ஆட்கொண்டு,
தெங்கு திரள் சோலை, தென்னன் பெருந்துறையான்
அம் கணன், அந்தணன் ஆய், அறைகூவி, வீடு அருளும்
அம் கருணை வார் கழலே பாதுடும் காண்; அம்மானாய்!

பாரார், விசும்பு உள்ளார், பாதாளத்தார், புறத்தார்,
ஆராலும் காண்டற்கு அரியான்; எமக்கு எளிய
பேராளன், தென்னன், பெருந்துறையான், பிச்சு ஏற்றி
வாரா வழி அருளி, வந்து என் உளம் புகுந்த
ஆரா அமுது ஆய், அலை கடல்வாய் மீன் விசிறும்
பேர் ஆசை வாரியனை பாதுடும் காண்; அம்மானாய்!

இந்திரனும், மாய், அயனும், ஏனோரும், வானோரும்,
அந்தரமே நிற்க, சிவன் அவனி வந்தருளி,
எம் தரமும் ஆட்கொண்டு, தோள் கொண்ட நீற்றன் ஆய்;
சிந்தனையை வந்து உருக்கும் சீர் ஆர் பெருந்துறையான்,
பந்தம் பறிய, பரி மேல் கொண்டான், தந்த
அந்தம் இலா ஆனந்தம் - பாடுதும் காண்; அம்மானாய்!

வான் வந்த தேவர்களும், மால், அயனோடு, இந்திரனும்;
கான் நின்று வற்றியும், புற்று எழுந்தும், காண்பு - அரிய
தான் வந்து, நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
ஊன் வந்து உரோமங்கள், உள்ளே உயிர்ப்பு எய்து
தேன் வந்து, அமுதின் தெளிவின் ஒளி வந்த,
வான் வந்த வார் கழலே - பாடுதும் காண்; அம்மானாய்!

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை,
வல்லாளன், தென்னன், பெருந்துறையான், பிச்சு ஏற்றி
கல்லைப் பிசைந்து கனி ஆக்கி, தன் கருணை
வெள்ளத்து அழுத்தி, வினை கடிந்த வேதியனை,
தில்லை நகர் புக்கு, சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதும் காண்; அம்மானாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டாயோ தோழி! கிறி செய்த ஆறு ஒருவன்
தீட்டு ஆர் மதில் புடை சூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதன எல்லாம் காட்டி சிவம் காட்டித்
தாள் தாமரை காட்டி தன் கருணைத் தேன் காட்டி
நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடு எய்த
ஆள் தான் கொண்டு ஆண்டவா பாடுதும் காண் அம்மானாய்!

ஓயாதே உள்குவார் உள் இருக்கும் உள்ளானை,
சேயானை, சேவகனை தென்னன் பெருந்துறையின்
மேயானை, வேதியனை, மாது இருக்கும் பாதியனை,
நாய் ஆன நம் - தம்மை ஆட்கொண்ட நாயகனை,
தாயானை, தத்துவனை, தானே உலகு ஏழும்
ஆயானை, ஆள்வானைப் பாடுதும் காண்; அம்மானாய்!

பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன், பெம்மான், பெருந்துறையான்,
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்,
கண் சுமந்த நெற்றிக் கடவுள், கலி மதுரை
மண் சுமந்து கூலி கொண்டு, அக் கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி - பாடுதும் காண்; அம்மானாய்!

துண்டப் பிறையான், மறையான், பெருந்துறையான்,
கொண்ட புரிநூலான், கோல மா ஊர்தியான்,
கண்டம் கரியான், செம் மேனியான், வெண்ணீற்றான்;
அண்டம் முதல் ஆயினான், அந்தம் இலா ஆனந்தம்,
பண்டைப் பரிசே, பழ அடியார்க்கு ஈந்தருளும்,
அண்டம் வியப்பு உறுமா - பாடுதும் காண்; அம்மானாய்!

விண் ஆளும் தேவர்க்கும் மேல் ஆய வேதியனை,
மண் ஆளும் மன்னவர்க்கும் மாண்பு ஆகி நின்றானை,
தண் ஆர் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டானை,
பெண் ஆளும் பாகனை, பேணு பெருந்துறையில்
கண் ஆர் கழல் காட்டி, நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதும் காண்; அம்மானாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பு ஆர் முலை பங்கன், தென்னன், பெருந்துறையான்,
தப்பாமே தாள் அடைந்தார் நெஞ்சு உருக்கும் தன்மையினான்,
அப் பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பு ஆர் சடை அப்பன், ஆனந்த வார் கழலே
ஒப்பு ஆக ஒப்புவித்த உள்ளத்தார் உள் இருக்கும்
அப்பாலைக்கு அப்பாலை பாடுதும் காண்; அம்மானாய்!

மைப் பொலியும் கண்ணி! கேள், மால், அயனோடு; இந்திரனும்
எப் பிறவியும் தேட, என்னையும் தன் இன் அருளால்
இப் பிறவி ஆட்கொண்டு, இனிப் பிறவாமே காத்து,
மெய்ப் பொருட்கண் தோற்றம் ஆய்; மெய்யே நிலைபேறு ஆய்,
எப் பொருட்கும் தானே ஆய், யாவைக்கும் வீடு ஆகும்
அப் பொருள் ஆம் நம் சிவனை பாடுதும் காண்; அம்மானாய்!

கை ஆர் வளை சிலம்ப; காது ஆர் குழை ஆட,
மை ஆர் குழல் புரள, தேன் பாய, வண்டு ஒலிப்ப
செய்யானை, வெண்ணீறு அணிந்தானை, சேர்ந்து அறியாக்
கையானை, எங்கும் செறிந்தானை, அன்பர்க்கு
மெய்யானை, அல்லாதார்க்கு அல்லாத வேதியனை,
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதும் காண்; அம்மானாய்!

ஆனை ஆய், கீடம் ஆய், மானிடர் ஆய், தேவர் ஆய்
ஏனைப் பிறவு ஆய், பிறந்து, இறந்து எய்த்தேனை
ஊனையும் நின்று உருக்கி, என் வினையை ஓட்டு உகந்து,
தேனையும், பாலையும், கன்னலையும் ஒத்து, இனிய
கோன் அவன் போல் வந்து, என்னை, தன் தொழும்பில் கொண்டருளும்
வானவன் பூம் கழலே பாடுதும் காண்; அம்மானாய்!

சந்திரனைத் தேய்த்தருளி, தக்கன் - தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள் நெரித்திட்டு, எச்சன் தலை அரிந்து;
அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்து,
சிந்தித் திசை - திசையே தேவர்களை ஓட்டு உகந்த,
செம் தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதும் காண்; அம்மானாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன் ஆய், உயிர் ஆய், உணர்வு ஆய், என்னுள் கலந்து,
தேன் ஆய், அமுதமும் ஆய், தீம் கரும்பின் கட்டியும் ஆய்,
வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும்,
தேன் ஆர் மலர்க் கொன்றைச் சேவகனார், சீர் ஒளி சேர்
ஆனா அறிவு ஆய், அளவு இறந்த பல் உயிர்க்கும்
கோன் ஆகி நின்றவா பாடுதும் காண்; அம்மானாய்!

சூடுவேன் பூம் கொன்றை; சூடிச் சிவன் திரள் தோள்
கூடுவேன்; கூடி முயங்கி, மயங்கி நின்று
ஊடுவேன்; செவ் வாய்க்கு உருகுவேன்; உள் உருகித்
தேடுவேன்; தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும் காண்; அம்மானாய்!

கிளி வந்த மென்மொழியாள் கேழ் கிளரும் பாதியனை,
வெளி வந்த மால், அயனும், காண்பு அரிய வித்தகனை,
தெளி வந்த தேறலை, சீர் ஆர் பெருந்துறையில்
எளி வந்து, இருந்து, இரங்கி, எண் ணரிய இன்னருளால்
ஒளி வந்து, என் உள்ளத்தின் உள்ளே ஒளி திகழ,
அளி வந்த அந்தணனைப் பாடுதும் காண்; அம்மானாய்!

முன்னானை மூவர்க்கும் முற்றும் ஆய் முற்றுக்கும்
பின்னானை பிஞ்ஞகனை பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாது இயலும் பாதியனை
தென் ஆனைக்காவானை தென் பாண்டி நாட்டானை
என்னானை என் அப்பன் என்பார்கட்கு இன் அமுதை
அன்னானை அம்மானைப் பாடுதும் காண் அம்மானாய்!

பெற்றி பிறர்க்கு அரிய பெம்மான், பெருந்துறையான்,
கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி, தன் அடியார்
குற்றங்கள் நீக்கி, குணம் கொண்டு, கோதாட்டி,
சுற்றிய சுற்றத் தொடர்வு அறுப்பான் தொல் புகழே
பற்றி, இப் பாசத்தைப் பற்று அற நாம் பற்றுவான்,
பற்றிய பேர் ஆனந்தம் பாடுதும் காண்; அம்மானாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநற் தாமம் பூமாலைதூக்கி
முளைக்குடந் தூபநல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 1

பூவியல் வார்சடை யெம்பபிரர்க்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கு
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமி
அந்தரர் கோனயன் றன்பெருமா
னாழியா னாதனல் வேலன்றாதை
யெந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ண மிடித்துநாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்களு லக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய வடியவர்க
ணின்று நிலாவுக வென்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோவில்பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ண மிடித்துநாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியு
மன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லா
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப் பொற் சுண்ண மிடித்துநாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ண மிடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
நாமுமவர் தம்மையார்ப்ப வார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டங் கண்மட மங்கைநல்வீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோடிரு முண்டந் துதைந்திலங்கச்
சோற்றெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 8

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறையவட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்யதிருவடி பாடிப்பாடி
செம்பொ னுலக்கை வலக்கை பற்றி
யையன ணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 9

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய் சூழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
வத்தன் கருணையொ டாடவாட
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 10

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
யாடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
யகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்கொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீ
ரென்னுடை யாரமு தெங்களப்ப
னெம்பெரு மானிம வான்மகட்கு
தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
றமைய னெம்மையன் றாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடி
கங்கை யிரைப்ப வராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

14

ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேற்
றேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே.

16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்து
மூனக மான்மழுச் சூலம்பாடி
யும்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடி
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

17

அயன்றலை கொண்டு செண்டாடல்பாடி
யருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலாலுதைத்தல் பாடி
யியைந்தன முப்புர மெய்தல் பாடி
யேழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே.

18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடி
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மே
லிட்டுநின் றாடு மரவம்பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே.

19

வேதமும் வேள்வியு மாயினர்க்கு
மெய்ம்மையும் பொய்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே.

20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 1

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 3

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன் காண் சாழலோ. 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இரு நிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. 10

நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனா லவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ
ஆனாலும் கேளாய் அயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. 13

தேன்புக்க தண்பணை சூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 15

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ. 17

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ. 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைப்பத்து

வேத மொழியர், வெண்ணீற்றர், செம் மேனியர்,
நாதப் பறையினர், அன்னே! - என்னும்
நாதப் பறையினர் நான்முகன், மாலுக்கும்,
நாதர், இந் நாதனார், அன்னே! - என்னும்

கண் அஞ்சனத்தர், கருணைக் கடலினர்,
உன் நின்று உருக்குவர்; அன்னே! - என்னும்,
உள் நின்று உருக்கி, உலப்பு இலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால்; அன்னே! - என்னும்.

நித்த மணாளர், நிரம்ப அழகியர்;
சித்தத்து இருப்பரால், அன்னே! - என்னும்,
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்; ஆனந்தரால்; அன்னே! - என்னும்.

ஆடு அரப் பூண், உடைத் தோல், பொடிப் பூசிற்று ஓர்
வேடம் இருந்தவாறு; அன்னே! என்னும்,
வேடம் இருந்தவா, கண்டு கண்டு, என் உள்ளம்
வாடும்; இது என்னே! அன்னே! என்னும்.

நீண்ட கரத்தர், நெறிதரு குஞ்சியர்
பாண்டி நல் நாடரால்; அன்னே! என்னும்
பாண்டி நல் நாடர் பரந்து எழு சிந்தையை
ஆண்டு அன்பு செய்வரால்; அன்னே! என்னும்.

உன்னற்கு அரிய சீர் உத்தரமங்கையர்
மன்னுவது என் நெஞ்சில்; அன்னே! என்னும்,
மன்னுவது என் நெஞ்சில்; மால், அயன், காண்கிலார்;
என்ன அதிசயம்! அன்னே! என்னும்.

வெள்ளைக் கலிங்கத்தர், வண் திருமுண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர்; அன்னே! என்னும்,
பள்ளிக் குப்பாயத்தர் பாய் பரி மேற்கொண்டு, என்
உள்ளம் கவர்வரால்; அன்னே! என்னும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளி அறுகினர்; சந்தனச் சாந்தினர்,
ஆள் எம்மை ஆள்வரால்; அன்னே! என்னும்,
ஆள் எம்மை ஆளும் அடிகளார் தம்கையில்
தாளம் இருந்த ஆறு; அன்னே! என்னும்.

தையல் ஓர் பங்கினர், தாபத வேடத்தர்,
ஐயம் புகுவரால்; அன்னே! என்னும்,
ஐயம் புகுந்து அவர் போதலும், என் உள்ளம்
நையும், இது என்னே! அன்னே! என்னும்.

கொன்றை, மதியமும், கூவிளம், மத்தமும்,
துன்றிய சென்னியர்; அன்னே! என்னும்,
துன்றிய சென்னியின் மத்தம் உன்மத்தமே,
இன்று, எனக்கு ஆன ஆறு; அன்னே! என்னும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய் எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாம் எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும் நின்றாயெனின் அல்லால்
போக்கிலன் வரலிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும்மரி யாஎங்கண் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் உணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்கு கின்றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கு எழுந் தருளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறும் எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பெரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குஉயிரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன் விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவுநின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருப்பள்ளியெழுச்சி முற்றிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிற்திருப்பதிகம்

மாறிநின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 1

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க் கசிந்துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப்
பரந்த முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந்துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத்தரைசே. 2

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின்றுருக்கிப்
பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே
திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடலே
திருப்பெருந்துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின்றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. 3

உணர்ந்த மாமுனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப் பறுக்கும் எம்மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந்துறையுறை சிவனே
குணங்கள் தாமில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப்பாயும்
திருப்பெருந்துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. 5

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந்துறையுறை சிவனே
நிரந்தஆகாயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறங் கண்டுகொண்டின்றே. 6

இன்றெனக் கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை
சென்றுசென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாம்
திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற்பாரே. 7

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்தம் ஆக்குமென் சோதி. 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட்குன்றே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக்கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. 9

தந்ததுன் தன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற் கிலன்ஓர்கைம் மாறே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலப்பத்து

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின்
சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன்
போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப்
பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன்
உடையாய்உன் அடைக்கலமே. 1

வெறுப்பனவே செய்யும் என்சிறு
மையைநின் பெருமையினால்
பொறுப்பவனே அராப் பூண்பவ
னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவனே நின்திருவரு
ளால்என் பிறவியைவேர்
அறுப்பவனே உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 2

பெரும்பெருமான்என் பிறவியை
வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப்பெரு
மான் என் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோன் நெடு
மாலறியாமல் நின்ற
அரும்பெருமான் உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 3

பொழிகின்ற துன்பப் புயல்வெள்
ளத்தில்நின் கழற்புணைகொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர்
வான்யான் இடர்க்கடல்வாய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவெறிய
அழிகின்ற னன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 4

சுருள்புரி கூழையர் சூழலிற்
பட்டுன் திறம்மறந்திங்கு
இருள்புரி யாக்கையிலே கிடந்
தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன்
பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 5

மாழைமைப் பாவிய கண்ணியர்
வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல்
தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள்
வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 6

மின்கணினார் நுடங்கும் இடையார்
வெகுளிவலையில் அகப்பட்டுப்
புன்கண னாய்ப்புரள் வேனைப்
புரளாமற் புகுந்தருளி
என்கணி லேஅமு தூறித்
தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கண னேஉடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 7

மாவடு வகிரன்ன கண்ணிபங்
காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு
வாய்நின் குறிப்பறியேன்
பாவிடையாடு குழல்போற்
கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிவறி யாஅன்பர் நின்னருட்
பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற்
றார் உன்னை வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறி
யேன்நின்னையே அறியும்
அறிவறி யேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 9

வழங்குகின் றாய்க்குன் அருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை
யேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழாப்பத்து

திருச்சிற்றம்பலம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்
பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே. 1

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந்துலக மூடுருவுஞ்
செம்பெருமானே சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
எம்பெருமானே என்னையாள்வானே
என்னைநீ கூவிக் கொண்டருளே. 2

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பதும்
உன்னை உணர்த்துவ துனக்கெனக்குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே. 3

வல்லைவாளரக்கர் புரமெரித்தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைமூவுலகும் உருவியன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே. 4

பண்ணினேர் மொழியாள் பங்கநீயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு
செவிகண் என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே. 5

பஞ்சின்மெல்லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே. 6

பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர்கோலச் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே. 7

பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆரமுதே அடியேனை
வந்துய ஆண்டாய் வாழ்கிலேன்
கண்டாய் வருக என்றருள் புரியாயே. 8

பாவநாசாவுன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர் தந்தேவே சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழுங்கழலாய் நிமிர்ந்தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே. 9

பழுதில்தொல் புகழாள் பங்கநீயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ
எனக்கோர் துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பத்து

திருச்சிற்றம்பலம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 1

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 2

எங்கள்நாயகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே தக்கநற்காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கண்நாயகனே திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே. 3

கமலநான்முகனுங் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற்கரிய
விமலனே எமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமிலநான் மறைசேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 4

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 5

துப்பனே தூயாய் தூயவெண்ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 6

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 7

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 8

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 9

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்
டென்னுடை யெம்பிரான் என்றென்
றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கழுக்குன்றப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

பிணக்கிலாத பெருந்துறைப்பெரு
மான் உன்நாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக்கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 1

பிட்டு நேர்பட மண் சுமந்த
பெருந்துறைப்பெரும் பித்தனே
சட்டநேர்பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனேசிறு
நாயினுங்கடையாய வெங்
கட்டனேனையும் ஆட்கொள்வான்வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 2

மலங்கினேன் கண்ணின்நீரை மாற்றி
மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேன் இனி
மேல் விளைவதறிந்திலேன்
இலங்குகின்றநின்சேவடிகள்
இரண்டும் வைப்பிடமின்றியே
கலங்கினேன் கலங்காமலேவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூணொணாததொரன்பு பூண்டு
பொருந்திநாள்தொறும் போற்ற வும்
நாணொணாததொர்நாணம் எய்தி
நடுக்கடலுள் அழுந்திநான்
பேணொணாதபெருந்துறைப்பெருந்
தோணிபற்றியுகைத்தலுங்
காணொணாத்திருக்கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 4

கோலமேனிவராக மேகுணமாம்
பெருந்துறைக்கொண்டலே
சீலமேதும் அறிந்திலாத என்
சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமேகரியாக நானுனை
நச்சி நச்சிட வந்திடுங்
காலமேஉனை ஓதநீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 5

பேதம் இல்லதோர் கற்பளித்த
பெருந்துறைப் பெருவெள்ளமே
ஏதமேபல பேசநீஎனை
ஏதிலார் முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமையற்ற
தனிச்சரண் சரணாமெனக்
காதலால் உனைஓதநீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 6

இயக்கி மாரறு பத்து நால்வரை
எண்குணம்செய்த ஈசனே
மயக்க மாயதொர் மும்மலப்பழ
வல்வினைக்குள் அழுந்தவும்
துயக்கறுத்தெனை ஆண்டுகொண்டு நின்
தூய்மலர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்முனேவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 7

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டபத்து

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே. 1

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே. 2

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே. 3

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காண என்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே. 4

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. 5

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. 7

அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவருந் தொழுதில்லை கண்டேனே. 8

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலம்அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே. 9

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிடித்தபத்து

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட்கரசே ஒழிவறநிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 1

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தறமண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 2

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 3

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 4

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலியேற்கு
விழுமிய தளித்ததோர் அன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 5

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 6

பாசவே றறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 7

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 8

பால்நினைத் தூட்டும் தாயினுஞ்சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 9

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற்சோதி
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

பாருரு வாய பிறப்பறவேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்
சீருரு வாய சிவபெரு மானே
செங் கமல மலர்போல்
ஆருரு வாயஎன் னார முதேஉன்
அடியவர் தொகை நடுவே
ஓருருவாய நின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே. 1

உரியேன் அல்லேன் உனக் கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியேன் நாயேன் இன்னதென்று
அறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்றுன்
பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே. 2

என்பே உருகநின் அருள்அளித்துன்
இணைமலர் அடி காட்டி
முன்பே என்னை ஆண்டுகொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே அருளி எனையுருக்கி
உயிருண் கின்ற எம்மானே
நண்பே யருளாய் என்னுயிர் நாதா
நின்னருள் நாணாமே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தில னேனும் பணிந்தில னேனும்உன்
உயர்ந்தபைங் கழல் காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப்பாய் எம்பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வ னேமுறை யோஎன்று
எத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே. 4

காணும தொழிந்தேன் நின்திருப் பாதம்
கண்டு கண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னைஎம் பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந் துருகுந்
தன்மைஎன் புன்மைகளால்
காணும தொழிந்தேன் நீயினி வரி னுங்
காணவும் நாணுவனே. 5

பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கரு ணையோடும் எதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை
யளிக்குஞ் சோதியை நீதி யிலேன்
போற்றியென் அமுதே என நினைந்
தேத்திப் புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே
ஆற்றுவனாக உடையவ னேஎனை
ஆவஎன் றருளாயே. 6

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்படை ஆட்சி

கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே?
காரிகையார்கள் தம் வாழ்வில் என் வாழ்வு கடைப்படும் ஆகாதே?
மண்களில் வந்து பிறந்திடும் ஆறு மறந்திடும் ஆகாதே?
மால் அறியா மலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே?
பண் களிகூர்தரு பாடலொடு ஆடல் பயின்றிடும் ஆகாதே?
பாண்டி நல் நாடு உடையான் படை ஆட்சிகள் பாடுதும் ஆகாதே?
விண் களி கூர்வது ஓர் வேதகம் வந்து, வெளிப்படும் ஆகாதே?
மீன் வலை வீசிய கானவன் வந்து, வெளிப்படும் ஆயிடிலே!

ஒன்றினொடு ஒன்றும், ஓர் ஐந்தினொடு ஐந்தும், உயிர்ப்பதும் ஆகாதே?
உன் அடியார் அடியார் அடியோம் என உய்ந்தன ஆகாதே?
கன்றை நினைந்து எழு தாய் என வந்த கணக்கு அது ஆகாதே?
காரணம் ஆகும் அநாதி குணங்கள் கருத்து உறும் ஆகாதே?
நன்று, இது, தீது என வந்த நடுக்கம் நடந்தன ஆகாதே?
நாமும் மேல் ஆம் அடியாருடனே செல, நண்ணுதும் ஆகாதே?
என்றும் என் அன்பு நிறைந்த பரா அமுது எய்துவது ஆகாதே?
ஏறு உடையான், எனை ஆளுடை நாயகன், என்னுள் புகுந்திடிலே!

பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடும் ஆகாதே?
பாவனை ஆய கருத்தினில் வந்த பரா அமுது ஆகாதே?
அந்தம் இலாத அகண்டமும் நம்முள் அகப்படும் ஆகாதே?
ஆதி முதல் பரம் ஆய பரம் சுடர் அண்ணுவது ஆகாதே?
செம் துவர் வாய் மடவார் இடர் ஆனவை சிந்திடும் ஆகாதே?
சேல் அன கண்கள் அவன் திருமேனி திளைப்பன ஆகாதே?
இந்திர ஞால இடர்ப் பிறவித் துயர் ஏகுவது ஆகாதே?
என்னுடை நாயகன் ஆகிய ஈசன் எதிர்ப்படும் ஆயிடிலே!

என் அணி ஆர் முலை ஆகம் அளைந்து, உடன் இன்புறும் ஆகாதே?
எல்லை இல் மாக் கருணைக் கடல் இன்று இனிது ஆடுதும் ஆகாதே?
நல் மணி நாதம் முழங்கி, என் உள் உற, நண்ணுவது ஆகாதே?
நாதன் அணித் திரு நீற்றினை நித்தலும் நண்ணுவது ஆகாதே?
மன்னிய அன்பரில் என் பணி முந்துற வைகுவது ஆகாதே?
மா மறையும் அறியா மலர்ப் பாதம் வணங்குதும் ஆகாதே?
இன் இயல் செங்கழுநீர் மலர் என் தலை எய்துவது ஆகாதே?
என்னை உடைப் பெருமான், அருள் ஈசன், எழுந்தருளப் பெறிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணினில் மாயை மதித்து, வகுத்த மயக்கு அறும் ஆகாதே?
வானவரும் அறியா மலர்ப் பாதம் வணங்குதும் ஆகாதே?
கண் இலி காலம் அனைத்தினும் வந்த கலக்கு அறும் ஆகாதே?
காதல் செய்யும் அடியார் மனம் இன்று களித்திடும் ஆகாதே?
பெண், அலி, ஆண், என நாம் வந்த பிணக்கு அறும் ஆகாதே?
பேர் அறியாத அனேக பவங்கள் பிழைத்தன ஆகாதே?
என் இலி ஆகிய சித்திகள் வந்து, எனை எய்துவது ஆகாதே?
என்னை உடைப் பெருமான், அருள் ஈசன், எழுந்தருளப் பெறிலே!

பொன் இயலும், திருமேனி வெண் நீறு பொலிந்திடும் ஆகாதே?
பூ மழை, மாதவர் கைகள் குவிந்து, பொழிந்திடும் ஆகாதே?
மின் இயல் நுண் இடையார்கள் கருத்து வெளிப்படும் ஆகாதே?
வீணை முரன்று எழும் ஓசையில் இன்பம் மிகுத்திடும் ஆகாதே?
தன் அடியார் அடி என் தலைமீது தழைப்பன ஆகாதே?
தான் அடியோமுடனே உய வந்து, தலைப்படும் ஆகாதே?
இன் இயம் எங்கும் நிறைந்து, இனிது ஆக இயம்பிடும் ஆகாதே?
என்னை முன் ஆளுடை ஈசன், என் அத்தன், எழுந்தருளப் பெறிலே!

சொல் இயலாது எழு தூ மணி ஓசை சுவை தரும் ஆகாதே?
துண் என என் உளம் மன்னிய சோதி தொடர்ந்து எழும் ஆகாதே?
பல் இயல்பு ஆய பரப்பு அற வந்த பராபரம் ஆகாதே?
பண்டு அறியாத பர அனுபவங்கள் பரந்து எழும் ஆகாதே?
வில் இயல் நல் நுதலார் மயல் இன்று விளைந்திடும் ஆகாதே?
விண்ணவரும் அறியாத விழுப் பொருள் இப்பொருள் ஆகாதே?
எல்லை இலாதன எண் குணம் ஆனவை எய்திடும் ஆகாதே?
இந்து சிகாமணி எங்களை ஆள, எழுந்தருளப் பெறிலே!

சங்கு திரண்டு, முரன்று எழும் ஓசை தழைப்பன ஆகாதே?
சாதி விடாத குணங்கள் நம்மோடு சலித்திடும் ஆகாதே?
அங்கு இது நன்று, இது நன்று எனும் மாயை அடங்கிடும் ஆகாதே?
ஆசை எலாம், அடியார் அடியோம் எனும் அத்தனை ஆகாதே?
செம் கயல் ஒண் கண் மடந்தையர் சிந்தை திளைப்பன ஆகாதே?
சீர் அடியார்கள் சிவ அனுபவங்கள் தெரிந்திடும் ஆகாதே?
எங்கும் நிறைந்து, அமுது ஊறு, பரம் சுடர் எய்துவது ஆகாதே?
ஈறு அறியா மறையோன் எனை ஆள, எழுந்தருளப் பெறிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சோப்பதிகம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப்
பக்தி நெறிஅறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தம் மலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே!

நெறி அல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனைச்
சிறு நெறிகள் சேராமே திரு அருளே சேரும் வண்ணம்
குறி ஒன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே!

பொய் எல்லாம் மெய் என்று புணர் முலையார் போகத்தே
மையல் உறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையல் இடம் கொண்ட பிரான் தன் கழலே சேரும் வண்ணம்
ஐயன் எனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே!

மண் அதனில் பிறந்து எய்த்து மாண்டு விழக் கடவேனை
எண்ணம் இலா அன்பு அருளி, எனை ஆண்டிட்டு என்னையும் தன்
சுண்ணம் வெண்நீறு அணிவித்துத் தூய் நெறியே சேரும் வண்ணம்
அண்ணல் எனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே!

பஞ்சு ஆய அடி மடவார் கடைக்கண்ணால் இடர்ப் பட்டு
நெஞ்சு ஆய துயர் கூர நிற்பேன் உன் அருள் பெற்றேன்
உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருக என்று
அஞ்சேல் என்று அருளியவா றார்பெறுவார் அச்சோவே!

வெந்து விழும் உடல் பிறவி மெய் என்று வினை பெருக்கிக்
கொந்து குழல் கோல் வளையார் குவி முலை மேல் வீழ்வேனைப்
பந்தம் அறுத்து எனை ஆண்டு பரிசு அற என் துரிசும் அறுத்து
அந்தம் எனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே!

தையலார் மையலிலே தாழ்ந்து விழக்கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசம் எனும் தாழ் உருவி
உய்யும் நெறி காட்டு வித்திட்டுஓங்காரத்து உட்பொருளை
ஐயன் எனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதல் பிறப்பு என்னும் தடம் சுழியில் தடுமாறிக்
காதலின் மிக்கு அணி இழையார் கலவியிலே விழுவேனை
மாது ஒரு கூறு உடைய பிரான் தன்கழலே சேரும் வண்ணம்
ஆதி எனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே!


செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதல் ஆய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருள் ஆக்கி நாய் சிவிகை ஏற்று வித்த
அம்மை எனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த 07.10.2022 அன்று இறைவனடி சேர்ந்த **எங்கள் குடும்பத் தலைவி நடராசா குணபூஷணி** அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரில் எமது இல்லம் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மற்றும் முகநூல்கள் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டும், மலர்வளையம் சாத்தியும் அஞ்சலி செலுத்தியோருக்கும் பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்தவர்களுக்கும், அமரர் அவர்கள் நோயுற்ற காலம் முதல் அவருக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதியர்கள் அனைவருக்கும் மேலும் மரணச் செய்தி அறிந்ததும் வைத்தியசாலைக்கு உடன் விரைந்து வந்து எம்மோடு துணை நின்ற உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும் அத்துடன் யாழ் பாப்பாச்சி அந்திய கால சேவையினருக்கும், விக்கினேஸ்வரா படகுச்சேவையினருக்கும், இறுதிக்கிரியைகள், அந்தியேட்டிக்கிரியைகளை நடாத்திய அந்தணப் பெருமக்களுக்கும் தேவாரபாராயணம் செய்தோர் இறுதிஅஞ்சலி நிகழ்வினை ஏற்பாடு செய்தவர்கள், வீட்டிலிருந்து எமது தாயாரின் உடலை சுடலைவரை சுமந்து சென்றவர்கள், உணவளித்து உதவிய உறவினர்கள் மற்றும் இறுதிக்கிரியை நிகழ்வுகள் அந்தியேட்டி நிகழ்வுகளை நேரலையூடாக காட்சிப்படுத்திய நயினை M குமரன் அவர்களுக்கும் இம் மலரினை குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய வரன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் இன்னும் சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும், எமது மனபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**6ம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா...

கருவறையில் கருக்கொண்ட காலம் தொட்டு
கருத்தெல்லாம் வளர்ச்சியிலே கண்ணாய் நிற்பாள்
தெரியாமல் உதரத்துள் வளரும் எந்தன்
தெரிசனத்தைத் தினைப்போதும் மறக்க மாட்டாள்
திருவாசக நம் வரவை சிந்தை கூர்ந்து
தெரியாத வேதனையை உடலில் தாங்கி
உருவாகத் திங்கள் பத்தை எமக்காய் ஈய்ந்து
உயிர் தந்த அன்னைக் கோர் உவமை இல்லை.

பிள்ளையது சிறு துயரம் பொறுக்க மாட்டாள்
பெருந்துயரம் தனக்கு வரில் பேசமாட்டாள்
கள்ளமில்லா உள்ளமதில் எம்மைத் தாங்கி
காலமெல்லாம் சுமைதாங்கி ஆக நிற்பாள்
உள்ளமதில் பிள்ளைகளின் உயர்வு தன்னை
உள்கியே உணர்வெல்லாம் உருகி நிற்பாள்
பிள்ளைமனம் கொண்ட அன்னை பேசும் வார்த்தை
பிரபஞ்சம் அதிரவைக்கும் பெருமந்திரம்.



ஆக்கம்: ஆறுமுகம் திலகவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன் பிறிண்டேர்ஸ், யாழ். 0779176840